P6

நேர்அத்தாள் - 3

HMI

PRIMARY SCHOOL
SEMESTRAL ASSESSMENT 1
PRIMARY SIX

# HIGHER TAMIL LANGUAGE

Name : ______________________ (    )

Class : Pr 6 ____________

Date :

| |
|---|
| 60 |

24 Questions
60 Marks

**Instructions**

Do not open this booklet until you are told to do so.
Follow all instructions carefully.
Answer all questions.

This booklet consists of ___ printed pages.

80

P6 HMT

SA - 1 தாள்- 3

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

வினா 1

என் பெற்றோரைப் பெருமையடையச் செய்த எனது செயல்

மேற்கண்ட தலைப்பில் 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை/கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தல் லட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

* அச்சம்பவம் எப்போது, எங்கு நடந்தது?
* உன் பெற்றோர் பெருமையடையும்படி நீ என்ன செய்தாய்?
* உன் பெற்றோர் என்ன செய்தார்கள்?
* உன்னுடைய செயலைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

வினா 2

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.

வழி தவறிய ரகு புக்கித் தீமா மலையில் இங்கும் அங்கும் அலைந்தான். மாலை மங்கும் நேரம். தொண்டை வரண்டு போனது. அப்போது அவன் தோளில் ...............

பெயர்: ____________ (6___)

தேதி: ____________ P6 HHT தாள் - 3

60

'அ'

**A1 <u>பிழை திருத்தம்</u> (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

ஒரு வணிகன் ஓர் ஒட்டகத்தை வளர்த்து வந்தான். (Q1)**<u>நீ</u>** இரக்கம் இல்லாதவன். அவன் ஒட்டகத்துக்குப் போதுமான உணவு தரமாட்டான். (Q2)**<u>ஒய்வும்</u>** கொடுக்கமாட்டான். பகல் முழுவதும் அது (Q3)**<u>பளுவாக</u>** பொருள்களைச் சுமந்து செல்ல வேண்டும். எனினும், ஒட்டகம் பொறுமையை இழக்கவில்லை.

ஒருநாள் வணிகன் அதன்மீது அதிகமான பொருள்களை ஏற்றினான். (Q4)**<u>அதைச்</u>** சுமந்துகொண்டு ஒட்டகத்தினால் பாலைவனத்தில் வேகமாக நடக்க முடியவில்லை. அதனால், வணிகன் அதைச் சவுக்கால் (Q5)**<u>அடித்தாள்</u>**. அது வலி பொறுக்க முடியாமல் கத்தியது. அதன்பின் அவனிடமிருந்து தப்பிச் செல்ல ஒட்டகம் முடிவு செய்தது.

அன்றிரவு வணிகன் உறங்கிக்கொண்டு இருந்தபோது, ஒட்டகம் அமைதியாக அவ்விடத்திலிருந்து தப்பியது. ஒன்றும் உணராத வணிகனுக்கு, அடுத்தநாள் ஒரு பேரதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

A2. <u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.**

Q6. தீபாவளியை முன்னிட்டு கடைக்காரர் விழாககால விற்பனையைத் தொடங்கினார்.

தீபாவளியை முன்னிட்டு விழாக்கால விற்பனை ______________________________

_________________________________________________________.

Q7. அன்று கிராம மக்கள் வசதி இல்லாததால் கூரை வீடுகளில் வாழ்ந்தனர்.

அன்று கிராம மக்கள் வசதி இருந்திருந்தால் கூரை வீடுகளில் ____________________

_________________________________________________________.

Q8. மீனா படிக்கும்போதும் கணினியில் வேலை செய்யும்போதும் மூக்குக் கண்ணாடி அணிவாள்.

மீனாவுக்குப் படிக்கும்போதும் கணினியில் வேலை செய்யும்போதும் ____________________

_________________________________________________________.

Q9. எடிசன் பல விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்டார்.

பல விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்ட பெருமை ______________________________

_________________________________________________________.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து கோடிட்ட இடங்களை நிரப்பு.**

ஓர் ஊரில் வேலன் என்ற ஒரு வேட்டைக்காரன் வாழ்ந்து வந்தான். வெகு காலமாக (Q10) ____________________(அவன்) வேட்டை நாய் ஒன்று இருந்தது.

வேட்டைக்குப் போகும்போது வேலன் அவனுடைய நாயையும் அழைத்துச் செல்வான். வேட்டையாடுவதில் நாய் திறமைசாலி. ஆனால் முதுமைப் (Q11)____________________(பருவம்) அதன் உடல் தளர்ந்து விட்டது அத்துடன் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு நலிவடைந்தது. இத்தனைக் காலமாக (Q12) ____________________(தன்) பல வகைகளிலும் நாய் உதவியதாக இருந்ததே, என்ற நன்றிகூட வேலனுக்கு சிறிதும் இல்லை. அது தற்போது பயன்படவில்லை என்பதற்காக வேலன் அவன் (Q13)____________________(நாய்) புறக்கணிக்கத் தொடங்கினான்.

அதற்கு வயிறார உணவு போடுவதில்லை. அதன் உடல் நலத்தைப் பற்றியும், சிறிதும் அவன் அக்கறை கொள்ளவில்லை. தனக்குப் பயனில்லாத நாயைக் கொன்று விடலாமா என்றுகூட அவன் நினைத்ததுண்டு.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



84

**B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன.அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

வேடனொருவன் சில யானைகளைப் பிடித்து விற்க எண்ணினான். அவற்றைப் பிடிக்க ஒரு திட்டம் தீட்டினான். (Q14)_____________. அக்குழியின் மேல் இலைகளையும் தழைகளையும் போட்டுக் குழியை மறைத்தான். (Q15)_____________.

இவனுடைய செயலை அந்த மரத்தின் மீதிருந்த குரங்கு கவனித்தது. அப்போது அவ்வழியாக ஒரு யானை வருவதை அது கண்டது. அது யானைக்குத் தீங்கு வரக் கூடாது என்ற எண்ணத்தில், உடனே குழியை மூடியிருந்த இலை, தழைகளை அகற்றியது.

(Q16)_____________. யானை குழியில் விழாமல் தப்பியது. குரங்கிற்கு நன்றி கூறி, யானை திரும்பியது. குரங்கின் செயலால் வேடன் மிகுந்த சினம் அடைந்தான். (Q17)_____________. அப்போது வேடன் அதைக் கொல்ல குறிபார்த்தான். தக்கச் சமயத்தில் அங்கு வந்த யானை, வேடனைத் தன் துதிக்கையால் தூக்கி வீசிற்று. வேடனின் குறி தவறியதால் குரங்கு உயிர் பிழைத்தது.

ஒருவருக்கு நன்மைச் செய்தால், நமக்கும் நன்மையே கிட்டும் தவிற தீமையல்ல என்பதை குரங்கும் யானையும் உணர்ந்தன.

14. இதனால் குழி பார்வைக்குத் தென்பட்டது.
15. வேடன் அதைத் துரத்திக்கொண்டு ஓடினான்.
16. அவை நீரோடைக்குச் சென்று வரும் வழியில் குழி ஒன்றைத் தோண்டினான்.
17. குரங்குக்கு நல்ல பாடம் கற்றுக் கொடுக்க எண்ணினான்.
18. இதனால் குழி கண்ணுக்கு எட்டவில்லை.
19. ஒருநாள் குரங்கு, கனிகள் அதிகம் உண்ட மயக்கத்தில் உறங்கிக்கொண்டிருந்தது.
20. உடனே அவன் அருகில் இருந்த மரத்தின் பின்னால் மறைந்துக்கொண்டான்.
21. உடனே அவன் மரத்தின் மீது ஏறிக்கொண்டான்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



85

C5. சுயவிடைக் கருத்தறிதல் (26 ம)

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது

அறிவையும் பலத்தையும் கொண்டு மனிதன் பல சாதனைகள் புரிந்துள்ளான். மனிதனுக்கு இவை மிகவும் பயன்படுவன்வாகும். தக்க நேரத்தில் இவற்றைப் பயன்படுத்தித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் துணிகிறான். **எதிரிகளிடமிருந்து** தம்மைக் காப்பாற்றிக் கொள்ள விலங்குகளுக்குக் கொம்புகள், நகங்கள், பற்கள் போன்ற ஆயுதங்கள் அவற்றின் உடலிலேயே அமைந்துள்ளன. தேளுக்கு விஷக் கொடுக்கும் பாம்பிற்கு நச்சுப் பற்களும் இருப்பதனாலல்லவோ மனிதன் அவற்றைக் கண்டு அஞ்சுகிறான்.

ஓர் உயிர் வாழ வேண்டுமென்றால் அதன் இனம் அழிந்து போகாமலிருக்க வேண்டும். எனவே, தாவரங்களும் தற்காப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதில் வியப்பில்லை அல்லவா?

தாவரங்கள் உணவு தயாரிக்க இலைகள் அவசியம். ஒளிச்சேர்க்கையின் போது தாவரங்களுக்குத் தேவையான உணவைத் தயாரிக்க இவ்விலைகள் பெரிதும் உதவுகின்றன. ஆடு, மாடு போன்ற பிராணிகளுக்கு மிகவும் பிடித்த உணவு இலைகள்தாம். இப்பிராணிகளிடமிருந்து இலைகளைக் காப்பாற்றத்தான் சில செடிகளின் இலைகளிலும் காம்புகளிலும் முட்கள் உள்ளன. சில புல் வகைகள் கூட கூர்மையான முனையுடைய இலைகளைக் கொண்டுள்ளன. ஆடுகளும் மாடுகளும் இவற்றைத் தின்னத் துணிந்தால் அவ்றின் நாவுகளுக்கு மட்டுமல்ல விழிகளுக்கும் அபாயம்தான்.

சில மரங்களும் மலர்களும் துர்நாற்றமிக்கவை. தென் அமெரிக்காவிலுள்ள கஸ்டேவியா மரத்திலிருந்து பிண நாற்றம் வீசும். இம்மரம் நச்சுத்தன்மையற்றதாக இருப்பினும் அதன் துர்நாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் விலங்கினங்கள் ஒதுங்கிவிடுவதையும் காணலாம்.



86

ஆனால், சில வகைப் பூச்சிகள், நத்தைகள், கம்பளிப்புழுக்கள் முதலியவை நஞ்சினால் பாதிக்கப்படுவதில்லை. மாறாக இவை அந்நஞ்சினை உட்கொண்டு அதைத் தம் உடலில் சேமித்து வைத்துக் கொள்கின்றன. அதனால் இப்புழுக்களைப் பறவைகள் தின்பதில்லை.

இனப் பெருக்கம் நடைபெறுவதற்காகப் 'போலன் கிரேன்' (Pollen grain) எனப்படும் மகரந்தத் தூள்கள் உள்ளன. அத்தூள் வேறு மலர்களில் உள்ள 'ஃபிலமண்ட்' (Filament) எனப்படும் சூல்முடியை அடைந்தால்தான் இனப் பெருக்கம் நடைபெறும். இதற்குப் பூச்சிகளும், வண்டுகளும் தேனீக்களும் உதவுகின்றன. ஆனால் சில பூச்சிகள் இந்த மகரந்தத்தை அழிக்கும் நோக்கத்தோடு வருவதுமுண்டு. இவற்றைத் தடுப்பதற்காகத் தாவரங்கள் சில கையாளுகின்றன. மனிதர்களிடமும் மிர்கங்களிடமும் உள்ள தற்காப்பு உணர்வு தாவரங்களிடையே இயற்கையாக அமைந்திருப்பது நம்மை வியக்க வைக்கிறது. தாவரங்கள் இயற்கையின் அரிய படைப்பு என்பதில் ஐயமில்லை.



87

<u>வினாக்கள்</u>

Q18. மனிதனின் தற்காப்புக்கு எவை உதவுகின்றன? (3 ம.பெ)

19. தாவரங்கள் தற்காப்பு முறையைக் கடைப்பிடிப்பதன் நோக்கம் என்ன? (4 ம.பெ)

Q20. இலைகளின் பங்கு என்ன? (3 ம.பெ)

Q21. சில உயிரினங்கள் கஸ்டேவியா மரத்தை விட்டு ஒதுங்கக் காரணம் என்ன? (4 ம.பெ)



88

Q.22. பறவைகள் சில புழுக்களை ஏன் தவிர்க்கின்றன? (4 ம.பெ)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q23. தாவரங்கள் எவ்வாறு தங்கள் இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன? (4 ம.பெ)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. எதிரிகளிடமிருந்து – ____________________ (2 ம. பெ)

ஆ. கையாளுகின்றன - ____________________ ( 2 ம.பெ)



89

Q.22. பறவைகள் சில புழுக்களை ஏன் தவிர்க்கின்றன? (4 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q23. தாவரங்கள் எவ்வாறு தங்கள் இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன? (4 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. எதிரிகளிடமிருந்து – ____________________ (2 ம. பெ)

ஆ. கையாளுகின்றன - ____________________ ( 2 ம.பெ)



89

P6 SA - 1 தாள் - 3

ஒரு வணிகன் ஓர்.........

1. அவன் 2. ஓய்வும் 3. பளுவான 4. அவற்றைச் 5. அடித்தான்

6. கடைக்காரரால் தொடங்கப்பட்டது.

7. வாழ்ந்திருக்க மாட்டார்கள்.

8. மூக்குக் கண்ணாடி அணிவது அவசியம்.

9. எடிசனுக்கு உள்ளது.

10. அவனிடம் 11. பருவத்தால் 12. தனக்கு 13. நாயை

14. 3 15. 5 16. 1 17. 4

18. மனிதனின் அறிவும் பலமும் அவனுடைய தற்காப்புக்கு உதவுகின்றன.

19. தாவரங்களின் இனம் அழிந்து போகாமலிருக்க அவை தற்காப்பு முறையைக் கடைப்பிடிப்பதன் நோக்கம் ஆகும்.

20. ஒளிச்சேர்க்கையின் போது தாவரங்களுக்குத் தேவையான உணவைத் தயாரிக்க இவ்விலைகள் பெரிதும் உதவுவதே இலைகளின் பங்காகும்.

21. கஸ்டேவியா மரம் நச்சுத்தன்மை அற்றதாக இருந்தும் அது பிண நாற்றம் வீசுவதே சில உயிரினங்கள் கஸ்டேவியா மரத்தை விட்டு ஒதுங்கக் காரணமாகும்.

22. சில புழுக்கள் நஞ்சினால் பாதிக்கப்படுவதில்லை என்பதாலும், அந்நஞ்சினை உட்கொண்டு அதைத் தம் உடலில் சேமித்து வைத்துக் கொள்கின்றன. அதனால் பறவைகள் சில புழுக்களை தவிர்க்கின்றன.

23. 'போலன் கிரேன்' எனப்படும் மகரந்தத் தூள்கள் வேறு மலர்களில் உள்ள பிலண்ட்' எனப்படும் சூல்முடியை அடைவதற்குப் பூச்சிகள், வண்டுகள் மற்றும் தேனீக்கள் உதவுகின்றன. இவ்வாறு தாவரங்கள் தங்கள் இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன.

24. அ. பகைவர்களிடமிருந்து ஆ. மேற்கொள்கின்றன.

தேர்வுத்தாள் - 4

PRIMARY SCHOOL
SEMESTRAL ASSESSMENT 1
PRIMARY SIX

# HIGHER TAMIL LANGUAGE

Name : ____________ ____________ (    )

Class : Pr 6 ____________

Date :

| | |
|---|---|
| | 60 |

24 Questions
60 Marks

## Instructions

Do not open this booklet until you are told to do so.
Follow all instructions carefully.
Answer all questions.

This booklet consists of ___ printed pages.

## P6 HMT

## SA - 1 தாள்- 4

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

### ஆரோக்கியமான வாழ்க்கை முறை

மேற்கண்ட தலைப்பில் **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தல் லட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீ உனது குடும்பத்தாருடன் வீட்டின் அருகிலுள்ள சமூக நிலையத்தில் நடைபெற்ற ஆரோக்கியமான வாழ்க்கை முறை என்னும் கண்காட்சியைக் காணச் செல்கிறாய். அந்தக் கண்காட்சியில் பலதரப்பட்ட அம்சங்கல் இடம்பெற்றன. நீயும் உனது குடும்பத்தினரும் பொழுதை அங்குக் கழித்தது தொடர்பாக, விவரித்து எழுதுக.

* யார், எதன் மூலம் இக்கண்காட்சியைப் பற்றி நீ அறிந்து கொண்டாய்?
* இந்தக் கண்காட்சி எங்கு, எப்போது நடைபெற்றது?
* நீயும் உன் குடும்பத்தினரும் அங்கு எவ்வாறு நேரத்தைக் கழித்தீர்கள்?
* இக்கண்காட்சியின் மூலம் நீ என்ன அறிந்துகொண்டாய்?

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.

"எனக்குப் பயமாக இருக்கிறது! என்னை விட்டுச் சென்றுவிடாதீர்கள்!" என்று என் பக்கத்தில் நின்று கொண்டிருந்த பெண்மணி திடீரென்று அழத் தொடங்கினார். பள்ளிக்குச் செல்லப் பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்த நான் திடுக்கிட்டேன். யார் அவர்? ஏன் இப்படி அழுகிறார்?

02

P6 HHT · SA1 தாள் - 4

"அ" பிரிவு

A1 பிழை திருத்தும்

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது. (10 மதிப்பெண்கள்)**

அறிவியல் மேதையான ஐன்ஸ்டீன் ஒருமுறை புகை வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தார். அந்தப் புகை வண்டி ஒரு (Q1) **நிளையத்தில்** வந்து நின்றது. வண்டி அங்கு அதிக நேரம் நின்றதால் ஐன்ஸ்டீன் ஏதாவது (Q2) **சாப்பிட்ட** வர எண்ணினார். அவர் நிலையத்திலிருந்த உணவகத்திற்குச் சென்றார். ஐன்ஸ்டீன் அங்கிருந்த (Q3) **பணியாளருக்கு**, "சாப்பிட என்ன இருக்கிறது ?" என்று வினவினார். பணியாளர் சிற்றுண்டிப் பட்டியலை அவரிடம் (Q4) **கொடுத்தனர்.** அவர் தமக்கு அருகில் நின்று சாப்பிட்டுக்கொண்டிருந்த ஒருவரிடம் அந்தப் பட்டியலைக் காட்டி, " இதில் என்ன இருக்கிறது என்பதைப் படித்துச் சொல்லுங்கள்," என்று (Q5) **வேண்டுகிறார்.** அதை வாங்கிச் சிறிது நேரம் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்த அந்தப் மனிதர், "உங்களைப் போல் எனக்கும் படிக்கத் தெரியாது," என்று கூறினார். அவர் இவ்வாறு சொன்னதைக் கேட்ட ஐன்ஸ்டீன் தமக்குத்தாமே சிரித்துக்கொண்டார்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல்

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது. (8 மதிப்பெண்கள்)

Q6. செழியன் போட்டியில் தோல்வியடைந்ததற்குத் தன்னம்பிக்கை இல்லாததே காரணமாகும்.

தன்னம்பிக்கை இருந்திருந்தால் செழியன் ______________________________

______________________________________________________________.

Q7. சிங்கப்பூர் அரசாங்கம் இருமொழிக் கல்வியை வளர்க்க அதிக தொகையைச் செலவழித்து வருகிறது.

சிங்கப்பூர் அரசாங்கம் அதிக தொகையைச் செலவு செய்யக் காரணம்

______________________________________________________________

Q8. சேமிக்கும் பழக்கத்தைச் சிறு வயதிலேயே ஊக்குவித்தால்தான் அது வழக்கமாகும்.

சேமிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக்கொள்ள சிறு வயதில் ______________

______________________________________________________________.

Q9. என் நண்பன் பல குரல்களில் பேசும் திறமை பெற்றவன்.

என் நண்பனுக்குப் பல குரல்களில் ______________________________

______________________________________________________________.



aw

A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து கோடிட்ட இடங்களை நிரப்பு.

ஒரு நாட்டின் தலைநகரத்தில் அனைவரும் நடமாடும் நான்கு சாலை சந்திப்பில் ஒரு பெண்ணின் சிலை இருந்தது. அந்தப் பெண் கைக்குழந்தை (Q10)________________________(ஒன்று) வைத்திருந்தாள். அந்த நாட்டிற்கு யார் வந்தாலும் அந்தச் (Q11)________________________(சிலை) அழகில் மயங்குவார்கள். "இந்தச் சிலை யாருடையது?" என்று கேட்பார்கள். "தியாகத்தின் சிலை இது" என்று மற்றவர்கள் கூறிவிட்டு அந்தச் சிலை பிறந்த கதையைக் கூறுவர். வெகு (Q12)________________________(காலம்) முன் அந்நாட்டு அரசி ஆண் குழந்தை ஒன்றை பெற்றுவிட்டு இறந்து போனாள். அரசன் தன் நம்பிக்கைக்கு உரிய செவிலி (Q13)________________________(ஒருத்தி) இளவரசனை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைத்தான். இளவரசனை அச்செவிலித்தாய் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். அப்போது அந்த இளவரசனைக் கொல்ல அரசனின் சொந்தக்காரர்கள் சூழ்ச்சி செய்தனர். ஆனால் செவித்தாயோ அந்தச் சூழ்ச்சியை முறியடிக்க முடிவு செய்தாள்.

## 'ஆ' பிரிவு

**B4 கருத்தறிதல்**

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது. ( 8 மதிப்பெண்கள்)**

ஓர் ஊரில் ஏழை ஒருவன் வாழ்ந்து வந்தான். சிறிதளவு நிலமே அவனுக்குச் சொந்தமாக இருந்தது. Q14 (________). அப்படி உழைத்தும் அவர்களுக்குப் போதுமான உணவு கிடைக்காமல் வறுமையில் வாடினர். பசியால் வாடிய போதும் அவர்கள் மகிழ்ச்சியாகப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் காலத்தைக் கழித்தனர். அவர்கள் வீட்டுக்கு அருகில் செல்வந்தன் ஒருவன் இருந்தான். Q15 (________). சாப்பாட்டிற்கே வழியில்லாத இவர்கள் எப்படி மகிழ்ச்சியாக ஆடிப் பாடுகிறார்கள் ? Q16 (________). பொற்காசு பையுடன் ஏழையின் வீட்டிற்குச் சென்று அவனிடம், "நீயும் உன் குடும்பமும் பசியால் வாடுகிறீர்கள். Q17 (________). உன் பிள்ளைகளில் ஒன்றை எனக்கு விற்றுவிட்டால் உனக்கு நான் ஏராளமாக பொற்காசுகள் தருவேன். உன் குடும்பத்தின் தொல்லை அகலும்," என்றான். அவனின் தீய எண்ணத்தை அறிந்த பிள்ளைகள் அவனுடன் செல்ல மறுத்து விட்டனர்.

(1) வஞ்சக மனம் படைத்த அவன் அவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்துக் கடுப்படைந்தான்.
(2) இவர்களின் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள ஆசைப்பட்டான்.
(3) அவனும் அவன் மனைவியும் பிள்ளைகளும் வயலில் கடுமையாக உழைத்தனர்.
(4) உன் துன்பத்தைப் போக்க உனக்கு எந்த வழியும் இல்லை.
(5) இவர்களின் மகிழ்ச்சியைக் குலைத்து அழ வைக்க என்ன செய்யலாம் என்று சிந்தித்தான்.
(6) வயலில் உழைக்க சக்தியில்லாமல் அவனும் மனைவியும் என்ன செய்வது என்று யோசித்தனர்.
(7) உன் துன்பத்தைப் போக்க ஒரு வழி கூறுகிறேன்.
நல்ல மனம் படைத்த அவன் அவர்களுக்கு உதவ முன் வந்தான்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



96

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (22 மதிப்பெண்கள்)**
**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனுடன் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

'நூல் பல கல்' என்பது நம் மூதாதையரின் வாக்கு. அதற்காக கண்ட நூல்களை எல்லாம் கற்பதில் பயனில்லை. கற்கத் தகுந்த நூல்கள், கற்கத் தகாத நூல்கள், இன்றியமையாத நூல்கள் என்ற **பாகுபாடு** வேண்டும். இல்லையென்றால் காலமும் முயற்சியும் வீணாவதோடு தவறான கல்வியாலும் சுமையான கல்வியாலும் வாழ்க்கை கெடும். ஆகையால் கற்க வேண்டிய நல்ல நூல்கள் எவை என்று தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். அவற்றையும் மேலோட்டமாக கற்காமல் ஆழமாகக் கற்க வேண்டும். கற்கும்போதே, வாழ்க்கையோடு ஒட்டி எண்ணி எண்ணிக் கற்க வேண்டும். கற்றவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தால்தான் நாம் கற்ற கல்விக்குத் தக்கவாறு நல்ல நெறியில் நிற்கமுடியும்.

ஒருவரது முகத்தில் உள்ள இரண்டு கண்களால் அவருக்கு முன் உள்ள பொருள்களையும் அவர் முன்னால் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளையும் மட்டுமே காணமுடியும். நாம் கண்களால் காண்பவை சில சமயங்களில் பொய்யாகி விடுவதும் உண்டு. ஆனால் எல்லா சமயங்களிலும் எதையும் ஆராய்ந்து காண்பதற்குப் பயன்படும் கண் கல்விக் கண்ணே. ஆகையால், கற்றோரே கண்ணுடையவர்கள் என்பர்.

செல்வத்தைவிடக் கல்வியே விரும்பத்தக்கது. அதனால்தான், கற்றவர்கள் மேன்மேலும் கல்வியையே **விழைகிறார்கள்**. செல்வத்தைச் சேர்ப்பதிலும் காப்பதிலும் பெருந்துன்பம் ஏற்படுகிறது. அவ்வாறு சேர்த்துக் காத்த செல்வத்தை இழந்துவிடும் துன்பமும் உண்டு. இழக்காமல் வைத்திருந்தாலும் பலரது பகைக்கு ஆளாக வேண்டியுள்ளது. ஆனால் கல்வி அப்படிப்பட்டது அன்று. கல்வியால் கற்றோரும் இன்புறுகிறார்கள். கற்றவர்களின் சாதனைகளால் நாடும் சமுதாயமும் பயன்பெறுகின்றன. கல்வியின் தனிச்சிறப்பு யாதெனில் இத்துறையில்தான் கற்றோர் பெறும் இன்பம் உலகத்தாரின் இன்பமாகவும் அமைந்திருக்கின்றது.

கல்லாதவனுக்கு இவ்வுலகத்தில் உள்ள தொடர்பு பிறப்பால் ஏற்படும் தொடர்பே. பிறந்த ஊரும் பிறந்த நாடுமே அவனுக்குத் தொடர்புடைய இடங்கள். ஆனால் கற்றவனுக்குப் பிறப்பால் அமைந்த தொடர்போடு கல்வயறிவால் பெறும் தொடர்பும் உள்ளது. அவன் கற்ற கல்வியின் பெருமையால் அவன் நாட்டினர் மற்றுமின்றி மற்ற நாட்டினரும் அவனைப் போற்றுவர். மேலும் அவனுடைய சாதனைகளால் மற்ற நாடுகளும் அவன் சேவைகளை நாடும். ஆகையால் வெளிநாடுகளும் வெளியூர்களும் அவனுக்குத் தொடர்புடைய இடங்களே ஆகும். அதனால்தான் 'கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு,' என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். கல்வியின் சிறப்பை அறிந்தும் சிலர் கல்வியில் முயற்சி இல்லாமல் இருக்கிறார்கள். சாகும் வரையிலும் கல்வி பெறாமலே இருந்து இறக்கிறார்கள். இது வீணான வாழ்வு.

கல்வி அறிவு இல்லாதவர், ஒரு கூட்டத்தில் ஒரு கருத்தைத் தெளிவாகத் தன்னம்பிக்கையுடன் எடுத்துச் சொல்ல முடியாது. அப்படிக் கூறினாலும் கூட , அதில் அறிவுப்பூர்வமான சிந்தனை இருக்காது. நூல்கள் பல கற்று அறிவு பெறாதவன் நல்ல



a7

தோற்றத்தோடு அழகாக விளங்களாம். ஆனால், அது மண்பாவை ஒன்று அழகாகத் தோன்றுவது போன்றதே. உள்ளே ஒன்றும் இருக்காது. எனவே, ஒருவன் நல்ல நூல்களைத் தான் கற்காவிட்டாலும் கற்றவர்கள் சொல்லும் கருத்துக்களைக் கேட்டாவ்து உணர வேண்டும்.

<u>வினாக்கள்</u>

Q18. நாம் நூலகளை எவ்வாறெல்லாம் பிரிக்கலாம்? (2)

______________________________

______________________________

______________________________

______________________________

Q19. நாம் ஏன் நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்? (4)

______________________________

______________________________

______________________________

______________________________

Q20. படித்தவர்கள் கண்ணுடையவர்கள் என்று கூறக் காரணம் என்ன? (4)

______________________________

______________________________

______________________________

______________________________



a9

Q21. செல்வம் ஏன் கற்றவர்களால் அதிகம் விரும்பப்படுவதில்லை?(4)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q22. கற்றவன் பிற நாடுகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறான்? (4)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q23. வீணான வாழ்வைத் தவிர்க்க நாம் என்ன செய்ய வேண்டும்? (4)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24. பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. பாகுபாடு - ____________________ (2)

ஆ. விழைகிறார்கள் - ____________________ (2)



ao

# P6 SA-1 தாள் - 4

அறிவியல் மேதையான ஐன்ஸ்டீன்..........

1. நிலையத்தில் 2. சாப்பிட்டு 3. பணியாளரிடம் 4. கொடுத்தார்
5. வேண்டினார்

6. போட்டியில் வெற்றியடைந்திருப்பான்.

7. இருமொழிக் கல்வியை வளர்க்கவே ஆகும்.

8. அதை ஊக்குவிக்க வேண்டும்.

9. பேசும் திறமை உண்டு.

10. ஒன்றை 11. சிலையின் 12. காலத்திற்கு 13. ஒருத்தியிடம்

14. 3 15. 1 16. 2 17. 7

18. கற்கத் தகுந்தவை, கற்கத் தகாதவை, இன்றியமையாதவை என நாம் நூல்களைப் பிரிக்கலாம்.

19. நாம் நல்ல நூல்களைப் படிக்காவிட்டால் காலமும் முயற்சியும் வீணாகும். மேலும், தவறான க்ச்ல்வியச்சலும் சுமையான கல்வியாலும் வாழ்க்கை கெட்டுவிடும். அதுமட்டுமல்லாமல், கற்றவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தால்தான் கற்ற கல்விக்குத் தக்கவாறு சிறந்த நெறியில் நிறக் முடியும். அதனால், நாம் நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்.

20. சில நேரங்களில் கண்களால் காண்பவை பொய்யாகி விடுகின்றன. ஆனால், படித்தவர்கள் தங்களுடைய கல்விக் கண்களைப் பயன்படுத்தி எப்போதும் எதையும் ஆராய்ந்து காண்கிறார்கள். அதனால் படித்தவர்கள் கண்ணுடையவர்கள் என்று கூறப்படுகிறது.

21. செல்வம் சேர்ப்பதற்கும் காப்பதற்கும் பெரும் துன்பமாக இருக்கிறது. அவ்வாறு சேர்த்துக் காத்த செல்வத்தை இழக்க வாய்ப்பும் இருக்கிறது. ஆனால், செல்வத்தை இழக்காமல் வைத்திருந்தாலும் பலரது பகைக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. அதனால் செல்வம் கற்றாவர்களால் அதிகம் விரும்பப்படுவதில்லை.

100

22. கற்றவன் அவன் கற்ற கல்வியின் பெருமையால் மற்ற நாட்டினரால் போற்றப்படுவதோடு அவனுடைய சாதனைகளால் மற்ற நாடுகள் அவன் சேவைகளை நாடுகின்றன. இவ்வாறு அவன் பிற நாடுகளுடன் தொடர்பு கொள்கிறான்.

23. வீணான வாழ்வைத் தவிர்க்க நாம் கல்வியின் சிறப்பை அறிந்து அதில் முயற்சி செய்து சாகும் வரை கல்வி கற்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், நாம் கற்றவர்கள் கூறும் கருத்துகளைக் கேட்டு உணர வேண்டும்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. வேறுபாடு
ஆ. விரும்புகிறார்கள்

101

PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 1

PRIMARY SIX

TAMIL LANGUAGE
HIGHER MOTHER TONGUE
தாள் - 5

பெயர் : ____________________ தேதி : ________________

வகுப்பு : தொ.நி: 4 ______ மதிப்பெண்கள் : ____________/60

Total Time : 1h 20 mins

INSTURCTIONS

Do not open the booklet until you are told to do so.

Follow aal instructions carefullu.

Answer all questions.

102

P6 HMT

SA -1 தாள் - 5

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**நாங்கள் செய்த வீரமிக்கச் செயல்**

நீ உன் நண்பர்களுடன் நீச்சல் குளத்திற்குச் சென்றாய். அங்கு நீங்கள் உற்சாகத்துடன் நீந்திக்கொண்டிருந்தீர்கள். அப்போது ஒரு சிறுவன் ஆழமான பகுதியில் தத்தளிப்பதைப் பார்க்கிறீர்கள்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

- நீயும் உன் நண்பர்களும் என்ன செய்தீர்கள்?
- அந்தச் சிறுவனுக்கு அப்படி உதவினீர்கள்?
- அவனுக்கு என்ன அறிவுரை கூறினீர்கள்?
- இந்த அனுபவத்தின் மூலம் நீ என்ன கற்றுக் கொண்டாய்?

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.

நான் எவ்வளவு நேரம் அலறிக் கொண்டிருந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. என் முகமெல்லாம் வியர்த்து இருந்தது. அப்போது என் தோளைக் உலுக்கியவரைப் பார்த்ததும்.............

P6 HMT தாள் - 5

பெயர்: ________________ (6___)
தேதி: ________________

"அ" பிரிவு

A1 **பிழை திருத்தம்** (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

நம் நாட்டின் சாங்கி விமான நிலையம் உலகப் புகழ் (1) பெற்ற விளங்குகிறது. பல நாடுகளிலிருந்து நாள்தோறும் நூற்றுக்கணக்கான விமானங்கள் இங்கு வந்து இறங்குகின்றன. எந்நேரமும் சுறுசுறுப்புடன் (2) விளங்கிய இது அழகும் தூய்மையும் நிறைந்து காணப்படுகிறது. சிறந்த நிர்வாகத் திறமையாலும், பணிவான சேவையாலும், ஆக்ககரமான செயல் திறத்தாலும் பலரின் (3) மணதைக் கவர்ந்துள்ளது. உலகின் தலைசிறந்த விமான நிலையங்களுள் ஒன்றாக இது விளங்குகிறது. நம் நாட்டின் விமான (4) நிருவனம் புகழ் பெற்ற பல விமான நிலையங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. சிறந்த விமானப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்திப் பல்வேறு நாட்டினரும் நாள்தோறும் பெருந்திரளாக வந்து (5) செல்கிறது. நம் விமான நிலையத்தின் சிறந்த சேவை உலகறிந்த ஒன்று எனலாம்.

தழுவல்: தமிழ் முரசு

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

10ª

**A2** <u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6 பேரங்காடியில் குப்பை வீசிய பள்ளி மாணவனைக் காவலர்கள் பிடித்தனர்.

பேரங்காடியில் குப்பை வீசிய பள்ளி மாணவன் ______________________

______________________________________________.

Q7 எந்த ஒரு செயலிலும் வெற்றி பெறத் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வேண்டும்.

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தாலொழிய ______________________

______________________________________________.

Q8 ஜப்பானில் நிகழ்ந்த நிலநடுக்கத்தால் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன.

ஜப்பானில் நிகழ்ந்த நிலநடுக்கம் ______________________

______________________________________________.

Q9 ஆசிரியர் மாணவர்களைக் கண்டித்ததால் அவர்கள் வீட்டுப்பாடங்களை ஒழுங்காகச் செய்தார்கள்.

மாணவர்கள் தங்கள் வீட்டுப்பாடங்களை ஒழுங்காகச் செய்ததற்கு

______________________________________________

______________________________________________.



105

**A3** <u>வேற்றுமை உருபுகள்</u> **(8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

ரேகா தன் அண்ணனின் அறைக்குள் சென்றாள். மேசையில் இருந்த செய்தித்தாளை எடுத்தாள். அதில் "அவதார்" (Avatar) என்ற ஆங்கிலப்படத்தின் விளம்பரத்தைக் கண்டாள். அந்தப் பட விளம்பரத்தில், நீல நிற (Q10) ________________ (தோற்றம்) காணப்பட்ட மனிதர்களைக் கண்டு அவள் ஆச்சரியம் அடைந்தாள். அந்தச் செய்தித்தாளைக் கையோடு எடுத்துக்கொண்டு (Q11) ________________ (கூடம்) வந்தாள். அந்தப் பட விளம்பரத்தை (Q12) ________________ (தந்தை) காட்டினாள். "அப்பா இந்தப் படத்தைப் பாருங்கள்! இந்தத் திரைப்படத்தில் உள்ளவர்கள் ஏன் (Q13) ________________ (நம்) போல் இல்லாமல் மாறுபட்டு இருக்கிறார்கள்?" என்று கேட்டாள். அதற்கு அவர், "இந்தப் படத்தில் வரும் கதாப்பாத்திரங்கள் வேற்றுலக மனிதர்கள். அதனால், அவர்கள் மாறுபட்டுக் காணப்படுகிறார்கள்," என்று விளக்கம் கொடுத்தார். ரேகா புரிந்தும் புரியாததுபோல் தன் அறையை நோக்கிச் சென்றாள்.

‘ஆ’ பிரிவு

B4 <u>முன்னுணர்வுக் கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)</u>

பின்வரும் பகுதியில் **Q14** முதல் **Q17** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

ஒரு கிராமத்தில் பூங்கோதை என்ற ஒரு தாய்க்கு மூன்று மகன்களும் ஓர் அழகிய பெண் குழந்தையும் இருந்தார்கள். **(Q14)** ________________ . அப்போது, ஒரு யானை பூங்கோதையின் வீட்டிற்குள் நுழைந்து அவளின் அழகான பெண் குழந்தையைத் தன் தந்தத்தால் தூக்கிச் சென்றது. யானையைத் தடுக்க முடியாத பூங்கோதை, தேம்பித் தேம்பி அழுதாள்.

வேலை முடிந்து வீடு திரும்பிய மகன்களிடம் தாய் நடந்ததைக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கூறினாள். **(Q15)** ________________ . சற்று நேரம் கழித்து, மூன்று சகோதரர்களும் ஒரு யானையைப் பார்த்தார்கள். அவர்கள் சந்தேகப்பட்டபடி, அவர்களின் தங்கை யானையின் கால்களின் மத்தியில் இருந்தாள். அவர்கள் அவளை யானையின் பிடியிலிருந்து காப்பாற்ற ஒரு திட்டத்தைத் தீட்டினர்.

சகோதரர்களில் ஒருவன் ஒரு கல்லை எடுத்து யானையின் மீது வீசினான். யானை தன் தலையைத் திருப்பிப் பார்த்த சமயத்தில், மூத்த சகோதரன் மின்னல் வேகத்தில் தன் தங்கையைத் தூக்கிக்கொண்டு ஓடினான்.
**(Q16)** ________________ . பின்னர், அது மீண்டும் அப்பெண்ணைத் தூக்கிச் சென்றது. அதனால் மூன்றாவது சகோதரன் யானையின் மீது அம்புகளை எய்தான். யானைக்குக் காயம் ஏற்பட்டது. **(Q17)** ________________ . சகோதரர்கள் தங்கையைத் தாங்கிப் பிடித்து அவளின் உயிரைக் காப்பாற்றினர்.

(1) உடனே தங்கையைத் தேடி மூன்று சகோதரர்களும் புறப்பட்டார்கள்.

(2) மூத்த சகோதரன் தங்கையைக் காப்பாறினான்.

(3) ஒரு நாள் மூன்று சகோதரர்களும் காட்டில் வேட்டையாடச் சென்றனர்.

(4) யானையும் விடாமல் மூத்த சகோதரனைத் தாக்கியது.

(5) ஒரு நாள் மூன்று சகோதரர்களும் காட்டில் வேலை செய்யச் சென்றனர்.

(6) வேதனை அடைந்த யானை அப்பெண்ணைத் தூர எறிந்தது.

(7) யானைப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு ஓடியது.

(8) மூன்று சகோதரர்களும் அதிர்ச்சிக்கு உள்ளாகினர்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



108

C5. சுயவிடைக் கருத்தறிதல் (22 ம)

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது

சிங்கப்பூரின் நான்குஅதிகாரத்துவ மொழிகளில் ஒன்று என்ற முறையில் தமிழுக்கு ஓர் முக்கியமான இடம் இருக்கிறது. தமிழ் மொழிக்கு ஆதரவு தருவதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது என்று துனை பிரதமர் பேராசிரியர் எஸ். ஜெயகுமார் தெரிவித்திருக்கிறார். மொழியோடு தமிழ்ச் சமூகம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்றால், உலகில் தலைசிறந்தவர்களுடன் போடியிட்டு வெற்றி பெற வேண்டிய நிலை இருக்கிறது. இதற்குக் கல்வி, திறன் மேம்பாடு, மறுபயிற்சி ஆகியவற்றில் சமூகம் ஒருமித்த கவனம் செலுத்த வேண்டும் என்று பேராசிரியர் ஜெயகுமார் வலியுறுத்தினார்.

தமிழ் மொழியை வாழும் மொழியாக நிலைபெறச் செய்ய சமூகம் எடுக்கும் முயற்சிகளை அரசாங்கம் நூற்றுக்கு நூறு ஆதரிக்கிறது என்று அவர் கூறினார். சிங்கப்பூரில் தமிழ் மொழியைக் கற்பிக்கவும் கற்றுக்கொள்ளவெளம் பயன்படுத்தவும் தெவையான வளங்களை அரசாங்கம் ஒதுக்கித் தந்துள்ளது. மேலும், பள்ளிகளில் இந்திய மாணவர்களைப் பேச்சுத் தமிழில் பேச ஊக்குவிப்பதற்குப் பலதரப்பட்ட வகுப்பறை நடவடிக்கைகளிலும் போட்டிகளிலும் ஈடுபடுத்தவும் ஆசிரியர்கள் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கல்வி அமைச்சு கூறியுள்ளது. இளம்பருவத்திலேயே மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல், அவர்கள் தங்கள் மொழியை மறப்பதற்கு வாய்ப்பு உண்டு. அவர்களது கற்றல் பயணம் மேலும் பின்தங்கிப் போகும் மற்றும் தரம் வாய்ந்த மொழிக்கூறுகளை இழக்கவும் நேரிடும்.

சிங்கப்பூர் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் சவால்கலையும் துணைப் பிரதமரும் விளக்கினார். அதாவது தலைசிறந்தவற்றுடன் போட்டியிட்டு வென்றால்தான் சமூகத்துக்கும் நாட்டுக்கும் வெற்றி கிட்டும். இதைச் செய்ய வேண்டுமென்றால், அதாவது தமிழ்ச் சமூகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்றால் மறுபயிற்சி, திறன் மேம்பாடு, சமூகம் கல்வியில் ஒருமித்த கவனம் செலுத்துதல் போன்றவை அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறினார். **இப்படிச் செய்தால் விரைவில் ஏற்படவிருக்கும் 60,000 வேலைகளில் பலவற்றிக் கைப்பற்றக்கூடிய அனுகூலம் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்படும் என்றார் பேராசிரியர் ஜெயகுமார்.**



109

இந்தியச் சமூகம் தொடர்ந்து கல்வியில் முன்னேறி வருவதையும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார். குறைந்தது 5 'ஓ' நிலைப் பாடங்களில் தேர்ச்சி கண்ட இந்தியர்களின் விகிதம் அதிகரித்துள்ளது. உயர்நிலைக் கல்விக்கு மேலும் கல்வி பெறும் இந்தியர்களின் விகிதமும் கூடியுள்ளது. இம்முன்னேற்றத்தை துணைப்பிரதமர் பெரிதும் பாராட்டினார்.

தழுவல்: தமிழ் முரசு

**வினாக்கள்**

Q18. தமிழ் மொழிக்கு ஆதர்வு தருவதில் அரசாங்கம் ஏன் உறுதியாக இருக்கிறது? (3)

________________________________

________________________________

________________________________

________________________________

Q19. உலகில் தலை சிறந்தவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற சமூகம் எதில் கவனம் செலுத்த வேண்டும்? (4)

________________________________

________________________________

________________________________

________________________________

Q20. அரசாங்கம் தமிழ் மொழியை வளர்க்கும் முயற்சிக்கு எவ்வாறு துணை புரிகிறது என்று பேராசிரியர் கூறியுள்ளார்? (4)

________________________________

________________________________

________________________________

________________________________



110

Q21. இளம் பருவத்திலேயே மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தாதன் விளைவுகள் என்ன? (4)

Q22. "இப்படிச் செய்தால் விரைவில் ஏற்படவிருக்கும் 60,000 வேலைகளில்..... என்றும் தொடரில் "இப்படி" என்ற சொல் எதைக் குறிக்கிறது? (4)

Q23. இந்தியச் சமூகம் தொடர்ந்து கல்வியில் முன்னேறி வருவதை எது உணர்த்துகிறது? (3)

Q24. <u>பொருள் எழுது. (4 மதிப்பெண்கள்)</u>

<u>பின்வரும் சொற்கல் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.</u>

அ. ஆதரிக்கிறது - ____________ (2)

ஆ சுட்டிக்காட்டினார் _ ____________ (2)

P6 SA-1 தாள் - 5

நம் நட்டின் சாங்கி விமான நிலையம்..........

1. பெற்று 2. விளங்கும் 3. மனதைக் 4. நிறுவனம் 5. செல்கின்றனர்

6. காவலர்களால் பிடிக்கப்பட்டான்.

7. எந்த ஒரு செயலிலும் வெற்றி பெற முடியாது.

8. பல உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியது.

9. ஆசிரியர் அவர்களைக் கண்டித்ததே காரணமாகும்.

10. தோற்றத்துடன் 11. கூடத்திற்கு 12. தந்தையிடம் 13. நம்மை

14. 5 15. 1 16. 4 17. 6

18. சிங்கப்பூரின் நான்கு அதிகாரத்துவ மொழிகளில் ஒன்று என்ற முறையில் தமிழுக்கு முக்கியமான இடம் இருக்கிறதால் தமிழ் மொழிக்கு ஆதரவு தருவதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

19. உலகில் தலை சிறந்தவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற சமூகம் கல்வி, திறன், மேம்பாடு, மறுபயிற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

20. தமிழை வாழும் மொழியாக நிலைபெறச் செய்ய சமூகம் எடுக்கும் முயற்சிகளை அரசாங்கம் நூற்றுக்கு நூறு ஆதரிக்கிறதாகவும், சிங்கப்பூரில் தமிழ் மொழியைக் கற்பிக்கவெளம் கற்றுக் கொள்ளவும் பயன்படுத்தத் தேவையான வளங்களை அரசாங்கம் ஒதுக்கித் தந்துள்ளது. ஈவ்வாறு அர்சாங்கம் தமிழ் மொழியை வளர்க்கும் முயற்சிக்கு துணைபுரிகிறது என்று பேராசிரியர் கூறியுள்ளார்.

21. இளம் பருவத்திலேயே மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவில்லையென்றால், அவர்கள் தங்கள் மொழியை மறப்பதற்கு வாய்ப்பு இருப்பதோடு அவர்களது கற்றல் பயணம் மேலும் பிந்தங்கிப் போகும். மற்றும் தரம் வாய்ந்த மொழிக் கூறுகளை இழக்கவும் நேரிடும். இவையே இளம் பருவத்திலேயே மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தாதன் விளைவுகள் ஆகும்.

112

22. "இப்படிச் செய்தால் விரைவில் ஏற்படவிருக்கும் 60,000 வேலைகளில்" என்னும் தொடரில் "இப்படி" என்ற சொல் தமிழ்ச் சமூகம் தலைநிமிர்ந்து நிற்க மறுபயிற்சி, திறன் மேம்பாடு, சமூகம் கல்வியில் ஒருமித்த கவனம் செலுத்துதல் போன்றவற்றின் அவசியத்தைக் குறிக்கிறது.

23. குறைந்தது 5 'ஓ' நிலைப் பாடங்களில் தேர்ச்சி பெற்ற இந்தியர்களின் விகிதம் அதிகரித்திருப்பதும், உயர்நிலைக் கல்விக்கு மேலும் கல்வி பெறும் இந்திர்யர்களின் விகிதம் கூடியிருப்பதும் இந்தியச் சமூகம் தொடர்ந்து கல்வியில் முன்னேறி வருவதை உணர்த்துகிறது.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. ஊக்குவிக்கிறது
ஆ. குறித்துக்காட்டினார்

PRIMARY SCHOOL
PRELIMINARY ASSESSMENT
PRIMARY 6

தேர்வுத் தாள் - 1

NAME : ______________________ (     )

CLASS : P6 (     )

DATE :

# HIGHER TAMIL

## PART 1 AND 2

Total Time : 50 minutes

| MARKS SCORED | |
|---|---|
| TOTAL | / 60 |

**INSTRUCTIONS TO CANDIDATES**

Do not open this booklet until you are told to do so.
Follow all instructions carefully.
Answer one question only.

114

P6 HMT

*Prelims* தாள் - 1

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் <u>ஒன்றைத்</u> தேர்ந்தெடுத்து <u>150 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**<u>வினா 1</u>**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**என்னால் மறக்க முடியாத அனுபவம்**

அன்று பள்ளியில் ஒரு கலைநிகழ்ச்சி. ஒரு நாடகத்தில் முக்கிய பாகத்தில் நடிக்கப் போகும் எனக்கு உள்ளூர பயம். நான் மேடையில் தோன்றினேன். அப்போது எனக்கு தலை சுற்றியது.

**<u>வினா 2</u>**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

யாரோ என்னை அழைக்கும் குரல் கேட்டு நான் திரும்பிப் பார்த்தேன். அங்கே நின்றுகொண்டிருந்த அதிசய உருவம் பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பாக இருந்தது. திரும்பி ஓடிவிட நினைத்த என்னை............

115

HMT

தொடக்கப்பள்ளி

தேர்வு 1

பெயர் : ____________ தேதி : ____________

வகுப்பு : P6 / ____ மதிப்பெண் : ______ / 60

**பிழை திருத்தம்** (10 ம.பெ.)

பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுதுக.

அன்று பள்ளி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். வெயில் சற்றுக் (Q1) கடுமையான இருந்தது. எனக்கு முன்னால் ஒரு மூதாட்டி இரண்டு கைகளிலும் பொருட்களைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியாமல் நடந்து சென்று (Q2) கொண்டிருப்பார். நான் அவருக்கு உதவும் எண்ணத்துடன் (Q3) அவரோடு அணுகினேன். என்ன ஆச்சரியம்! அவர் என் அடுக்குமாடி வீட்டின் ஐந்தாம் (Q4) தலத்தில் வசிப்பவர். நான் அவரிடம் என்னை அறிமுகம் செய்துகொண்டு அவருடைய பொருட்களை வாங்கிக் கொண்டு அவருடன் அவர் வீட்டை (Q5) அடைந்தோம். அவற்றை அவரிடம் ஒப்படைத்துவிட்டு வீடு திரும்பினேன்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



116

P6 / Prelims / 1

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. மாதவன் தன் ஓய்வு நேரங்களில் வயிலின் வாசித்து மகிழ்வான்.

மாதவன் தன்னை மகிழ்விக்க

______________________________

______________________________

Q7. பண வசதி இல்லாததால், மாலதி படிப்பைத் தொடரமுடியவில்லை.

மாலதி தன் படிப்பைத் தொடர்ந்து

______________________________

______________________________

Q8. உலகக் கிண்ணக் காற்பந்து ஆட்டத்தைக் காண மக்கள் அரங்கத்தில் திரண்டிருந்தனர்.

மக்கள் அரங்கத்திற்குத் திரண்டு வரக்காரணம்,

______________________________

______________________________

Q9. அறிஞர்களால் பல புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டன.

பல புதிய கண்டுபிடிப்பகள் உருவாக ______________________________

______________________________



117

A3 வேற்றுமை உருபுகள் ( 8 மதிப்பெண்கள் )

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

பள்ளி இறுதித் தேர்வு நெருங்கிக்கொண்டிருந்தது. அருணன் தேர்வுக்காக வீட்டில் படித்துக்கொண்டிருந்தான். அப்போது பக்கத்து வீட்டு வானொலி அதிகச் சத்தமாக ஒலித்துக்கொண்டிருந்தது. அதனால், அருணன் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் சிரமப்பட்டான்.

எனவே, அவன் பக்கத்து வீட்டாரிடம் (Q10) ________________ (பணிவு) வானொலிப் பெட்டியின் சத்தத்தைக் குறைத்து வைக்கும்படி கேட்டுக்கொண்டான். அவர்களும் நிலைமையைப் புரிந்துகொண்டு (Q11) ________________ (வானொலி) சத்தத்தைக் குறைத்து வைத்தனர். மேலும், தவற்றுக்கு மன்னிப்பும் கேட்டனர். பக்கத்து வீட்டுக்காரர்களின் புரிந்துணர்வை எண்ணி அருணன் மகிழ்ச்சி அடைந்தான். அதன் பிறகு (Q12) ________________ (அருணன்) படிப்பில் முழுக்கவனம் செலுத்த முடிந்தது. அவன் நன்றாகப் படித்தான்.

பள்ளி இறுதித் தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்தான். தன்னுடைய (Q13) ________________ (படிப்பு) உதவியாக வானொலிச் சத்தத்தைக் குறைத்து வைத்த பக்கத்து வீட்டினருக்கு அருணன் நன்றி கூறினான். அவர்களின் பரந்த உள்ளத்தை எண்ணிப் பெருமை அடைந்தான்.



118

## முன்னுணர்வுக் கருத்தறிதல் ( ம.பெ.)

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுதுக.

ஆற்றில் கடும் சீற்றத்துடன் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. மாணவன் ஒருவன் அந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்டான். (Q14) ________________. அங்கே கூட்டம் கூடி விட்டது. ஆற்றில் குதித்து அவனைக் காப்பாற்றும் துணிவு யாருக்கும் வரவில்லை. "ஆற்றில் குதித்தால் உயிர் பிழைக்க வழி இல்லை," என்று தயங்கினார்கள். அப்பொழுது ஒருவர் ஆற்றில் குதித்தார். (Q15) ________________. கடுமையான முயற்சிக்குப் பின் அந்த மாணவனைக் காப்பாற்றிக் கரைக்கு கொண்டு வந்தார். உயிர் பிழைத்த அந்த மாணவன் நா தழுதழுத்த குரலில் "ஐயா! தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் என் உயிரைக் காப்பாற்றினீர்கள். தங்கள் உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்," என்று கண் கலங்கச் சொன்னான். அவனை ஏற இறங்க பார்த்த அவர், "உன் உயிர் விலை மதிப்பற்றது என்று நினைத்தேன். (Q16) ________________. நீ இப்பொழுது மாணவனாக இருக்கிறாய். (Q17) ________________. எனக்குத் தனியாக நீ நன்றி தெரிவிக்க வேண்டாம். அதுவே எனக்குச் செய்யும் நன்றி ஆகும்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றார்.

(1) ஒருமுறை எல்லாருக்கும் நன்றி தெரிவித்தால் போதும்.

(2) அதனால்தான் துணிந்து உன்னைக் காப்பாற்றினேன்.

(3) அவனைக் காப்பாற்ற பலர் முயன்றனர்,

(4) கரையில் இருந்தவர்கள் இதைப் பார்த்து அலறினார்கள்.

(5) வெள்ளத்தை எதிர்த்து நீந்தினார்.

(6) மாணவன் மயங்கிய நிலையில் இருந்தான்.

(7) படித்து இந்தக் கிராமத்தில் இருக்கும் பிள்ளைகளுக்கு பாடம் கற்பித்து எல்லாருக்கும் உதவியாக இருந்தாலே போதும்.

(8) அதனால்தான் உன்னைத் தூக்கினேன்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14. | |
| Q15. | |
| Q16. | |
| Q17 | |



11a

C5 சுயவிடைக் கருத்தறிதல் (20 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

இவ்வுலகில் பிறப்பவர்கள் எல்லாரும் வாழ்வதற்காகவே பிறந்துள்ளனர். ஆனால் பிறந்தவர்களெல்லாரும் வசதியாகவும் நிம்மதியாகவும் வாழ்கிறார்கள் என்று கூறமுடியாது.

நம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் உணவு, உடை, உறைவிடம் ஆகும். பிற வசதிகள் இல்லாவிட்டாலும் உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் ஆகியவற்றிற்குக் குறைவில்லாமல் இருந்தால், அதனைக் கவலையற்ற வாழ்க்கை எனலாம்.

ஆனால், இந்த அடிப்படை வசதிகள்கூடப் பெறாமல் அல்லற்படும் குடும்பங்கள் பல உண்டு. இவர்களது இத்தகைய துயர வாழ்க்கைக்குக் காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானது சிக்கனமற்ற வாழ்க்கை முறையாகும். தங்களது வருவாயின் அளவை எண்ணாமல், அதிகச் செலவு செய்து ஆடம்பரத்தை மேற்கொண்டு வாழ்வதன் காரணமாகவே அவர்கள் கவலைக்கும் துயருக்கும் உள்ளாகின்றனர்.

வாழ்க்கைக்குப் பணம் மிகவும் அவசியம். அந்தப் பணத்தை ஈட்டுவது என்பது எளிய காரியமன்று. ஈட்டிய பணத்தைச் சிலர் குடி, குதிரைப் பந்தயம், சூதாட்டம் போன்ற தீயப் பழக்கங்களுக்கு விரயம் செய்துவிட்டு, செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கத் துணிகிறார்கள். மற்றும் சிலர், தம் வருவாயைவிடக் கூடுதலான



120

அளவு விலையுள்ள பொருள்களை வாங்கி வீட்டில் குவித்து அவற்றுக்குப் பணம் கட்ட முடியாமல் கடன் வாங்குகிறார்கள். பொருளை ஈட்டினால் மட்டும் போதாது. ஈட்டிய பொருளைச் சரியான முறையில் செலவிடும் முறையையும் அறிந்திருக்க வேண்டும்.

வருவாய்க்கேற்ற செலவு முறையில் சேமிப்பும் இடம் பெற்றிருக்க வேண்டும். சிக்கனமாக வாழ்ந்து சேமிக்கும் தொகையைப் பெருக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும். இதையறிந்த நம் அரசாங்கம், அவரவர் குடியிருக்கும் வட்டாரத்தில் ஓர் அஞ்சலகச் சேமிப்பு வங்கியைக் கட்டியுள்ளது. மேலும், அது மக்களைச் சேமிக்கவும் ஊக்குவிக்கிறது. இப்போது நாம் சேமிக்கும் பணம் பின்னர் நம் வருங்காலத்திற்கு ஊன்றுகோலாகப் பயன்படும். சேமிப்பின் அளவிற்கு ஏற்ப வாழ்க்கை வசதிகளையும் அமைத்துக்கொள்ளலாம். வாழ்க்கையில் வசதிகள் பெறவும் வளமாக, இன்பமாக வாழவும் சிக்கனமும் சேமிப்பும் **இன்றியமையாதவை** சிக்கன வாழ்க்கை, அவ்வாறு வாழ்வோருக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் நலம் தரும். மக்களால் சேமிக்கப்படும் தொகை நாட்டுப்பணிகளுக்கும் உதவும். சிக்கனமாக வாழ்வோர் பெருமையுடனும் வாழலாம். எனவே, சிக்கன வாழ்வு சிறப்பூட்டும் நல்வாழ்வாகும்.



121

வினாக்கள்

Q18. இப்பூமியில் வாழும் அனைவருக்கும் எவை கிடைப்பதில்லை? (3 ம.பெ)

19. ஒருவர் கவலையில்லாமல் வாழ என்னென்ன தேவை? (3 ம.பெ)

Q20. மனிதருக்கு ஏற்படும் கவலைக்கும் துன்பத்துக்கும் காரணம் என்ன?(4 ம.பெ)

Q21. எவ்வகைக் கெட்ட பழக்கங்கள் ஒருவன் சம்பாதிக்கும் பொருளை அழிக்கக் கூடியவை? (4 ம.பெ)



122

Q.22. அரசாங்கம், அஞ்சலகச் சேமிப்பு வங்கிகளைக் கட்டியதன் நோக்கம் என்ன? (3 ம.பெ)

Q23. சிக்கனத்தையும் சேமிப்பையும் மேற்கொள்வதால் நாம் எவற்றை பெற முடியும்? (3 ம.பெ)

Q24. பொருள் எழுது (6 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. அல்லற்படும் - ____________ (2 ம. பெ)

ஆ. பெருக்கவும் - ____________ ( 2 ம.பெ)

இ. இன்றியமையாதவை - ____________ ( 2 ம.பெ)



123

P6 Preliminary Exam

தேர்வுத்தாள்- 1

அன்று பள்ளி முடிந்து.........

1. கடுமையாக 2. கொண்டிருந்தார் 3. அவரை 4. தளத்தில்
5. அடைந்தேன்

6. ஓய்வு நேரங்களில் வயலின் வாசிப்பான்.

7. படிக்க முடியாததற்குப் பணவசதி இல்லாததே காரணமாகும்.

8. உலகக் கிண்ணக் காற்பந்தாட்டத்தைக் காண்பதற்காகும்.

9. அறிஞர்களே காரணமாவார்கள்.

10. பணிவுடன் 11. வானொலியின் 12. அருணனால் 13. படிப்புக்கு

14. 4 15. 5 16. 2 17. 7

18. இப்பூமியில் வாழும் அனைவருக்கும் வசதியும் நிம்மதியும் கிடைப்பதில்லை

19. ஒருவர் கவலையில்லாமல் வாழ உண்ண உணவும் உடுத்த உடையும் இருக்க இடமும் தேவை.

20. சிலர் சிக்கனமற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள். அவர்கள் தங்களது வருவாயின் அளவை எண்ணாமல், அதிகச் செலவு செய்து ஆடம்பரத்தை மேற்கொண்டு வாழ்கிறார்கள். அதனால் அவர்கள் கவலையும் துன்பமும் அடைகிறார்கள்.

21. குடி, குதிரைப் பந்தயம், சூதாட்டம் போன்ற கெட்ட பழக்கங்கள் ஒருவன் சம்பாதிக்கும் பொருளை அழிக்கக் கூடியவை.

124

22. மக்களைச் சேமிக்க ஊக்குவிக்க அரசாங்கம் அஞ்சலகச் சேமிப்பு வங்கிகளைக் கட்டியது.

23. நாம் சிக்கனத்தையும் சேமிப்பையும் மேற்கொள்வதால் வசதிகள் பெறவும் வளமாக, இன்பமாக வாழவும் முடிகிறது.

Q24. சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

அ. துன்பப்படும்
ஆ. அதிகரிக்கவும்
இ. முக்கியமானவை

பள்ளி

முன்னோட்டத் தேர்வு
தொடக்கநிலை 6
உயர்தமிழ்
தாள் – 2

பெயர் : ____________________( )

| | |
|---|---|
| | 60 |

வகுப்பு: 6 / _____

தேதி : ____________

**மாணவர்களுக்கான குறிப்புகள்:**

1. இந்த வினாத்தாளில் மொத்தம் 24 வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
2. ஒவ்வொரு வினாவையும் படித்த பிறகு எளிமையான வினாவிற்கு முதலில் விடை எழுது.
3. இந்த வினாத்தாளில் மொத்தம் 7 பக்கங்கள் உள்ளன. ஏதாவது ஒரு பக்கம் விடுபட்டிருப்பின் வினாத்தாளை மாற்றிக் கொள்ளவும்.
4. நேரத்தை வீணாக்காதீர்கள்

126

P6 HMT

*Prelims* தாள் - 2

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**நற்பண்பே உயர்வு தரும்**

அன்று முதியோர் இல்லத்தில் சமூகசேவை செய்ய நானும் என் வகுப்பு மாணவர்களும் சென்றோம். முதியவர் ஒருவர் என்னை அழைத்தார். அவருக்குப் பணிவிடை செய்யும் போது அவர் என் கையடக்கத் தொலைபேசியைக் கேட்டார். நான் வீடு திரும்பும் முன் அவரிடம் என் கையடக்கத் தொலைபேசியைத் திருப்பிக் கேட்டேன். அவர் என்னிடம் கேட்டது என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

அன்று ஏற்பட்ட சுனாமியை யாரும் மறந்திருக்க முடியாது. பொங்கி எழுந்த கடலலையைக் கண்டு மக்கள் நாலாபக்கமும் சிதறினர். அப்போது "ஐயோ~!" என்ற சத்தம் கேட்டது. பேரலை ஒன்று ஒரு சிலரை கடலுக்குள் இழுத்துச் சென்றது. ......................

127

தேர்வுத்தாள் - 2

**A1.** பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.

அலி இரண்டு நாள்களாகப் பள்ளிக்கு வரவில்லை. அன்று பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்ததும் சிவா தொலைபேசி மூலம் அலியுடன் தொடர்புகொண்டான். அப்பொழுதுதான் அலிக்குக் கடுமையான பல்வலி ஏற்பட்டிருப்பதை (Q1) <u>அறிகிறான்.</u> பல் மருத்துவர் அவனுக்கு ஐந்து நாள்கள் (Q2) <u>ஓய்வு</u> வழங்கியிருப்பதாகச் சிவா அலியிடமிருந்து தெரிந்துகொண்டான். சிவா அன்றிலிருந்து தினமும் அலியுடன் தொடர்புகொண்டு பள்ளி நிகழ்வுகளைக் (Q3) <u>கூறியது</u>. குறிப்பாக, அவன் வகுப்பில் (Q4) <u>நடந்து</u> பாடங்களை அவனிடம் விளக்கிக் கூறினான். ஐந்து நாள்கள் (Q5) <u>உருண்டோடியது.</u> அலி குணமடைந்து பள்ளிக்குச் சென்றான். அலி சிவாவின் கைகளைப் பற்றிக்கொண்டு நன்றி தெரிவித்தான்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



128

**A2.** வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. மக்களால் அதிக வாக்கு அளிக்கப்பட்ட பாடகர் இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடகர் மக்களிடமிருந்து அதிக வாக்குகள் ________________________________________.

Q7. தூய்மையான சுற்றுப்புறச் சூழலை உருவாக்குவதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் முயற்சியும் தேவை.

எல்லாருடைய ஒத்துழைப்பும் முயற்சியும் இல்லாவிட்டால் ____________________

____________________________________________________________.

Q8. அவர் நூலக புத்தகங்களுக்கான அபராதத்தைக் கட்டினால்தான் புத்தகங்களை இரவல் பெற முடியும்.

அவர் நூலக புத்தகங்களுக்கான அபராதத்தைக் கட்டாததால் புத்தகங்களை இரவல் ________________________________________.

Q9. பள்ளிகள் மின்சாரத்தைச் சேமிக்கும் வழிகளை அறிந்துகொள்ள இணையப்பக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இணையப்பக்கத்தின் வழி பள்ளிகள் மின்சாரத்தைச் சேமிக்கும் வழிகளை

____________________________________________________________.

**A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

உலக மதங்களுள் முக்கியமான பௌத்த மதம், புத்தரால் அறிமுகமானது. சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன் இன்றைய நேப்பாளம் (Q10) ________________ (இந்தியா) ஒரு பகுதியாக இருந்தது. இப்பகுதி சுத்தோனர் என்ற (Q11) ________________ (மன்னர்) ஆளப்பட்டது. இவரது மகன்தான் புத்தர். இவருடைய இயற்பெயர் சித்தார்த்தர். இளைஞரானதும் இவர் ஒரு பேரரசராகவோ அல்லது துறவியாகவோ ஆகலாம் என இவர் பிறந்ததும் கணிக்கப்பட்டது. மன்னர் (Q12) ________________ (தம்) மகனின் முடிவை எண்ணி ~~கலக்கம்~~ அடைந்தார். அவர் தம் மகனைப் பாதுகாக்க ஒரு தனி (Q13) ________________ (அரண்மனை) அமைத்தார். இங்கே வெளி உலகத் துன்பங்கள் அவரை நெருங்காதவாறு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டன. சித்தார்த்தார் இங்கே செல்லமாக வளர்ந்தார்.



130

**B4** <u>கருத்தறிதல்</u> **(8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

மலைமீது இருந்த குடிசையில் குடியானவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். (Q14)_________. அந்தச் சிலையின் சிறப்பைப்பற்றிக் குடியானவன் உணராமல் இருந்தான்.

ஒரு நாள் நகரத்திலிருந்து கல்விமான் ஒருவர் அந்த மலை கிராமத்துக்கு வந்தார். அப்போது அந்தச் சிலை அவர் கண்ணில் பட்டது. (Q15)_________. சேறு படிந்த அந்தச் சிலைக்கு என்ன விலை கொடுத்தாலும் விற்பதற்குத் தயாராக இருந்தான், குடியானவன். கல்விமான் அந்தச் சிலைக்கு ஒரு வெள்ளிக் காசு கொடுத்து வாங்கித் தம்முடன் நகரத்துக்கு எடுத்துச் சென்றார். குடியானவனுக்கு ஒரே மகிழ்ச்சி.

(Q16)_________. அப்போது ஒரு கடையின் வாசலின் முன் கூட்டம் அலை மோதுவதைக் கண்டான். "இரண்டு வெள்ளிக் காசுக்கு உலகப் புகழ்பெற்ற சிலையைப் பாருங்கள்!" என்று ஒருவர் கூவிக் கொண்டிருந்தார். (Q17)_________. அவன் உள்ளே எட்டிப் பார்த்தான். எந்தச் சிலையை ஒரு வெள்ளிக்கு விற்றானோ அந்தச் சிலையை வைத்துப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தார், அந்தக் கல்விமான்.

| | |
|---|---|
| 1 | ஒரு மாதத்திற்குப் பிறகு குடியானவன் நகரத்துக்குச் சென்றான். |
| 2 | அவன் குடிசையின் அருகே பல சிற்பங்கள் புதைந்து கிடந்தன. |
| 3 | அவன் குடிசையின் முன் ஓர் அழகான சிலை ஒன்று கிடைத்தது. |
| 4 | அவர் அந்தச் சிலையைக் குடியானவனிடமிருந்து பறித்துக்கொள்ள எண்ணினார். |
| 5 | மறுநாள் அவன் பொருள்கள் வாங்கக் கடைக்குச் சென்றான். |
| 6 | அவர் வேறு யாருமல்ல அந்தக் கல்விமான்தான். |
| 7 | அதைக் கேட்ட குடியானவனுக்கு ஆர்வம் ஏற்பட்டது. |
| 8 | அதன் மகிமையை உணர்ந்த அவர், குடியானவனிடம் அதனை விலைக்குக் கேட்டார். |

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

'இ' பிரிவு

C5 <u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (26 மதிப்பெண்கள்)

சேமிப்பது என்பது செழிப்பபாக வாழ்வதற்கான வழி. வளமான எதிர்காலத்துக்கு நாம் போடும் விதையே சேமிப்பு. இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அதே வேளையில் பெரும்பாலோர் சேமிப்பது கிடையாது. தேனீக்கள் கூடுகளில் தேனைச் சேர்த்துச் சேமித்து வைக்கின்றன. எறும்புகள் புற்றுகளில் தானியங்களைச் சேமித்து வைக்கின்றன. இப்படித் தமக்குத் தேவையான உணவைச் சேமித்து வைத்துக்கொண்டு அவசர காலத்தில் பயன்படுத்துகின்றன, சில உயிரினங்கள்.

அன்றாடம் உழைத்துச் சம்பாதிக்கிறவர்கள் தங்கள் வருமானத்தில் சிறிதளவாவது சேமித்து வைக்கவேண்டும். 'உங்கள் முதல் செலவே சேமிப்பு' என்று ஒரு வங்கியின் முழக்க வரி கூறுகிறது. இன்றைய காலகட்டத்தில் கல்விச் செலவு, மருத்துவச் செலவு, பயணச் செலவு, வீட்டுச் செலவு எனப் பல செலவுகள் ஒருவருக்கு ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் சமாளிக்கச் சேமிப்பு மிகவும் <u>அவசியம்</u>.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பார்கள். அதுபோல சிறு வயதிலேயே, சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். *<u>அது ஆயுள் வரை தொடரும்.</u>* சிறுவர்கள் பள்ளிச் சிற்றுண்டிக்குக் கொடுக்கப்படும் பணத்தில் <u>மீதம்</u> இருந்தால் அதைச் சேமிக்கலாம். அது ஐந்து காசாகக்கூட இருக்கலாம். சிறு துளி பெரு வெள்ளம் அல்லவா? மேலும் விழாக்காலங்களில் கிடைக்கும் அன்பளிப்புப் பணம், போட்டிகளில் கிடைக்கும் பரிசுத் தொகைகள் போன்றவற்றையும் சிறுவர்கள் சேமிக்கலாம். முதலில் சேமிக்கவேண்டும் என்ற உறுதியான எண்ணம் அவர்களிடத்தில் இருக்கவேண்டும்.

அடுத்து, ஒருவர் சிக்கனமாகச் செலவு செய்வதன் மூலமும் பணம் சேமிக்கலாம். சிலர் தேவை இல்லாமல் செலவு செய்து, பின் கடன் வாங்கி படாது பாடுபடுவர். பிறர் நம்மை மதிக்கவேண்டும் என்று ஆடம்பரச் செலவுகளைச் செய்துவிட்டு, கடன் மேல் கடன் வாங்கி பின் அதை அடைக்க முடியாமல் கண்ணீரில் காலத்தைக் கழிப்பார்கள். வாழ்க்கை முழுவதும் கடனாளியாக வாழ்வதால் இவர்களுக்கு வாழ்க்கையே ஒரு சுமையாகி விடுகிறது. மன நிம்மதியை இழந்து எப்போதும் கவலையாகவே இருப்பர். ஆகவே, நாளைய வாழ்க்கை ஒளிமயமாக அமைய, இன்றைய சேமிப்பு உதவும் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் சேமித்துப் பழகவேண்டும்.

வினாக்கள்

Q18. சேமிப்பைப்பற்றி நாம் மறுக்க முடியாத உண்மைகள் யாவை? (4 ம.பெ)

19. தேனீக்கள், எறும்புகள் போன்ற உயிரினங்களிடமிருந்து நாம் என்ன பாடம் கற்றுக்கொள்ளலாம்? (4 ம.பெ)

Q20. தற்காலத்தில் ஒருவர் எத்தகைய செலவுகளை எதி நோக்குகின்றனர்? (3 ம.பெ)



134

Q21. 'அது ஆயுள் வரை தொடரும்' என்ற வாக்கியத்தில் 'அது' என்பது எதைக் குறிக்கிறது? (3 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q22. சிறுவர்கள் சேமிப்பதற்கான பணத்தை எங்கிருந்து பெறலாம்? (4 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q23. ஒருவர் கடன் வாங்குவதால் என்னென்ன சிரமங்களை எதிர்நோக்குகிறார்? (4 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24. <u>பொருள் எழுது</u> (6 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. அவசியம் - ______________________ (2 ம. பெ)

ஆ. மீதம் - ______________________ ( 2 ம.பெ)



135

P6 Preliminary Exam

தேர்வுத்தாள் - 2

அலி இரண்டு நாள்களாக..........

1. அறிந்தான் 2. ஒய்வு 3. கூறினான் 4. நடந்த 5. உருண்டோடின

6. பெற்றார்.

7. தூய்மையான சுற்றுப்புறச் சூழலை உருவாக்க முடியாது.

8. பெற முடியாது.

9. அறிந்து கொள்ளலாம்.

10. இந்தியாவின் 11. மன்னரால் 12. தம்முடைய 13. அரண்மனையை

14. 3 15. 8 16. 1 17. 7

18. செழிப்பாக வாழ்வதற்குச் சேமிக்க வேண்டும். மேலும் சேமிப்பு வளமான எதிர்காலத்திற்கு நாம் போடும் விதை. இவையே சேமிப்பிப் பற்றி நாம் மறுக்க முடியாத உண்மைகள் ஆகும்.

19. தேனீக்களும் எறும்புகளும் தங்களுடைய உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கின்றன. இவற்றைப் போல் நாம் தேவையான பொருட்களைச் சேமித்து வைத்துக் கொண்டு அவசர காலத்தில் அவற்றைப் பயன்படுத்தலாம். இந்தப் பாடத்தையே தேனீக்கள், எறும்புகள் போன்ற உயிரினங்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

20. தற்காலத்தில் ஒருவர் கல்விச் செலவு, வீட்டுச் செலவு, மருத்துவச் செலவு, பயணச் செலவு ஆகிய செலவுகளை எதிர் நோக்குகின்றார்.

21. "அது" என்பது சிறு வயதிலேயே சேமிக்கும் பழக்கத்தைக் குறிக்கிறது.

22. பள்ளிச் சிற்றுண்டிக்குக் கொடுக்கப்படும் பணத்தில் மிச்சம் இருப்பதிலிருந்தும், விழாக்காலங்களில் கிடைக்கும் அன்பளிப்புப் பணத்திலிருந்தும், போட்டிகளில் கிடைக்கும் பரிசுத் தொகைகளிலிருந்தும் சிறுவர்கள் சேமிப்பதற்கான பணத்தைப் பெறலாம்.

23. ஒருவர் கடன் வாங்குவதால் கடனை அடைக்க இயலாமல் கண்ணீரில் காலத்தைக் கழிப்பார். அதுமட்டுமல்லாமல் அவருக்கு வாழ்க்கை ஒரு சுமையாகி விடுகிறது. அதோடு, அவர் மன நிம்மதியை இழந்து எந்நேரமும் கவலையில் இருப்பார்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. முக்கியம்
ஆ. மிச்சம்

(PRIMARY)

PRELIMINARY EXAMINATION
HIGHER TAMIL LANGUAGE
PRIMARY 6

PAPER 1 & 2

**INSTRUCTIONS TO CANDIDATE**

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

THERE ARE TWO QUESTIONS IN PAPER 1 QUESTION 1 AND QUESTION 2.

ANSWER ONE QUESTION ONLY.

/60

---

Name: ______________________________ (     )

Class: Pr 6_______

Date: ____________

138

P6 HMT

*Prelims* தாள் - 3

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு"**

நீண்ட நாட்களாகத் தேடிக்கொண்டிருந்த ஒரு கணினி விளையாட்டு ஒன்றை நீ பரிசாகப் பெறுகிறாய். அதை வைத்து விளையாடிக் கொண்டிருக்கும்போது உன் தங்கை வேகமாக வந்து உன்மேல் மோதுகிறாள். அப்போது அவ்விளையாட்டுப்பொருள் கீழே விழுந்து உடைகிறது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

செய்தித்தாளில் முதல் பக்கத்தில் வந்த படத்தையும் செய்தியையும் பார்த்த என் உடல் நடுங்கியது. நான் எப்படி....................

# தேர்வுத்தாள் 3

தொடக்கப்பள்ளி
முன்னோட்டத் தேர்வு
உயர்தமிழ்
வகுப்பு - 6

பெயர் : ____________________ தேதி : ________
வகுப்பு : 6________ மதிப்பெண்கள் :____/60

"அ" பிரிவு

**A1** *பிழை திருத்தம்* **(10 மதிப்பெண்கள்)**

*பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.*

நாம் ஒரு செயலில் ஈடுபடும்போது முழுக்கவனத்தையும் அதில் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தினால் (1) *மட்டும்* அச்செயலின் முழுப்பயனையும் நம்மால் அடைய முடியும். நாம் ஓரிடத்தில் (2) *அமர்ந்த* கொண்டு நம் நினைவை வேறு எங்காவது வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. பள்ளியில் பாடம் நடைபெறும்போது நாம் விளையாட்டைப் பற்றி நினைக்கக் கூடாது. அவ்வாறு நினைத்துக் கொண்டிருந்தால் நம்மால் (3)*இரன்டையுமே* ஒழுங்காகச் செய்ய இயலாது போய்விடும். இது (4) *வளர்த்து* கொண்டே போய் நமது பழக்கமாகிவிடும். அதன் பின் (5) *அவற்றை* மாற்றுவது என்பது இயலாத ஒன்றாகிவிடும். எனவே, நாம் எந்தவொரு வேண்டாத பழக்கத்தையும் ஆரம்பத்திலேயே தடுத்துவிடுவது நல்லது. அப்போதுதான் நாம் செய்ய நினைக்கும் செயல்களில் மனக்குழப்பமின்றி ஈடுபட்டு வெற்றி காண முடியும்.

| | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |



14C

வாக்கியங்களை முடித்தெழுதுதல் (8 மதிப்பெண்கள் )

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

6. ஆங்கிலேயர்கள் உலகின் பல நாடுகளை அடிமைப்படுத்தி ஆட்சி செய்து வந்தனர்.
பல நாடுகள் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் ________________________________
________________________________________________.

7. சிங்கப்பூரின் வளர்ச்சி அனைவரையும் வியப்பில் ஆழ்த்துகிறது.
சிங்கப்பூரின் வளர்ச்சியைக் கண்டு ________________________________
________________________________________________

8. சாலையில் மோதிக்கொண்டு கிடந்த வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.
சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படக் காரணம் ________________________________
________________________________________________

9. விலைவாசி உயர்வு பல நடுத்தரக் குடும்பங்களைப் பெரிதும் பாதித்துள்ளது.
விலைவாசி உயர்வால் ________________________________
________________________________________________



141

*வேற்றுமை உருபுகள் ( 8 மதிப்பெண்கள் )*

*பின்வரும் பகுதியில் அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.*

செடி வகைகளில் ஜாடிச் செடி என்பது ஒருவகைச் செடி. இது உலகின் பல (10)________________ *(நாடுகள்)* இருக்கின்றது. இது புழு, (11)________________ *(பூச்சிகள்)* சாகடிக்கும் தன்மை கொண்டது. இந்தச் செடியில் பூக்கும் பூக்கள் ஜாடி போன்ற வடிவத்தில் உள்ளன. இந்தப் பூவினுள் மற்ற பூக்களில் இருப்பதைவிடத் தேன் அதிக அளவில் உள்ளது. (12)________________ *(இப்பூக்கள்)* வெளியாகும் தேனின் மணம் பூச்சிகளை மயக்கும் தன்மை உடையது. எனவே, புழு, பூச்சிகள் தேனின் (13)________________ *(மணம்)* எளிதில் ஈர்க்கப்படுகின்றன. அவை அம்மணத்தை நுகர்ந்துகொண்டே போய் மயக்கமடைந்து உள்ளே விழுந்துவிடுகின்றன. அவ்வாறு விழுந்துவிட்ட புழு, பூச்சிகள் தேனில் தத்தளித்துக் கொண்டே கடைசியில் இறந்துவிடுகின்றன.



14

கருத்தறிதல் ( 8 மதிப்பெண்கள் )

பின்வரும் பகுதியில் வினா 14 முதல் 17 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

கபிலன் ஒரு குறும்புக்காரச் சிறுவன். அவன் எப்பொழுதும் தன் புத்திசாலித்தனத்தைக் காட்ட மிகுந்த ஆர்வம் உள்ளவன். ஒரு நாள் அவன் முடிதிருத்தும் கடைக்குச் சென்றான். (14) ______________________. உடனே, ``என்ன வேண்டும் கபிலன்?`` என்று நாவிதர் கேட்டார். அதற்குக் கபிலன் என் தாடியை சவரம் செய்யுங்கள்`` என்று உத்தரவிட்டான். (15) ______________________. இருப்பினும் அவர் மரியாதையுடன் ``நிச்சயமாகச் செய்கிறேன், தம்பி`` என்றார்.

நாவிதர் கபிலனின் தோள்களின் மீது துண்டு ஒன்றை எடுத்துப் போர்த்தினார். (16)______________________. அதன்பின் வேறு வேலையில் ஈடுபடத் தொடங்கி விட்டார். (17) ______________________. முகத்தில் சோப்புடன் காத்திருப்பது சிரமமாக இருந்தது. அவன் நாவிதரைப் பார்த்து,``ஏன் என்னைக் காக்க வைக்கிறீர்கள்?`` என்று கத்தினான். நாவிதர் புன்னகையுடன், ``உன் தாடி வளர்வதற்காகக் காத்திருக்கிறேன்,`` என்று பதில் சொன்னார். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை கபிலன் உணர்ந்து கொண்டான்.

1. அவன் முகத்தில் சோப்பையும் தடவினார்.
2. கடையில் எந்தப் பொருள்களை வாங்கலாம் என்று கண்ணோட்டமிட்டான்.
3. நாவிதர் கபிலனின் விளையாட்டைப் புரிந்து கொண்டார்.
4. நாவிதர் அவனை வெளியே செல்லும்படிக் கூறினார்.
5. அங்கிருந்த நாவிதரிடம் தன் சாமர்த்தியத்தைக் காட்ட யோசித்துக்கொண்டிருந்தான்.
6. அவன் தலைமுடியை அவன் விருப்பப்படியே வெட்டிவிட்டார்.
7. கபிலன் வெகுநேரம் காத்திருந்தான்.
8. கபிலன் அப்படியே தூங்கிப் போய் விட்டான்.

| வினா எண் | விடை |
|---|---|
| 14 | |
| 15 | |
| 16 | |
| 17 | |



147

## `இ` பிரிவு

*சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)*
*பின்வரும் பகுதியைக் கவனமாகப் படி. பின்னர் வினாக்களுக்கு விடையளிக்கவும்.*

நமது செயல்களின் ஆரம்பம் நமது எண்ணங்கள். நமது எண்ணங்களின் பிறப்பிடம் நமது மனம். ஆகவே, நமது மனத்தை நம் கைவசத்தில் வைத்திருக்க வேண்டும். அதன் உள்ளே புகும் எண்ணங்களையும் ஆசைகளையும் பற்றி நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆகவேதான், நமது மனத்தில் நல்லெண்ணங்களையும் மகிழ்ச்சிகரமான எண்ணங்களையும் உள்ளே விடவேண்டும். அவற்றை அடைகாக்க வேண்டும்.

மாறாகத் துயர எண்ணங்களையும் பயம் நிறைந்த எண்ணங்களையும் பொறாமை நிறைந்த எண்ணங்களையும் கெட்ட எண்ணங்களையும் நம்முள்ளே விடுவதன் மூலம் நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்கிறோம். மேலும், வாழ்க்கையில் துன்பம் வரும்போது துயரப்படாமல் இருக்க முடியுமா? முடியாதுதான். வாழ்வில் ***அல்லல்கள்*** வரும்போது அவற்றைக் களைவதற்கான மாற்று யோசனைகளைத் தேட வேண்டுமே தவிர, அவற்றில் மூழ்கி வாழ்வைத் துயர் நிறைந்ததாக்கிக் கொள்ளக்கூடாது.

நாம் பெற்ற அறிவை வாழ்க்கைக்கு எப்படிப் பயன்படுத்துவது? அது ஒரு பழக்கம். மனப்பழக்கம். ஒவ்வொரு முறையும் நிகழ்கின்ற ஒவ்வொரு செயலையும் அறிவு பூர்வமாக ஆராய்ந்து, `ஏன், எப்படி` என்று கேட்டுப் புரிந்துகொள்ளும்போது நமது மன ***இயக்கத்தையும்*** புரிந்து கொள்கிறோம். நமது மன இயக்கத்தை நம் கைக்குள் கொண்டு வருகிறோம்.

உணர்வுகள் எண்ணங்களின் பிரதிபலன். எண்ணம்தான் மூலம். எண்ணத்திலிருந்துதான் உணர்வுகள் தோன்றுகின்றன. இதை நாம் உணர்ந்துகொள்ளும் போது நம்மை நாம் கட்டுப்படுத்த முடியும். நமது மனத்தில் திடீரென்று எழுந்த கோப உணர்ச்சியின் காரணம், மனத்தில் தோன்றிய ஓர் எண்ணமே என்பதைப் புரிந்து கொண்டால், `ஆ! இதற்காகவா நான் இவ்வளவு கோபம் கொண்டேன்?` என்று உணர்வோம்; மீண்டும் அம்மாதிரியான கோப உணர்ச்சிக்கு அடிமையாக மாட்டோம்.

ஆஸ்துமா என்றும், இரத்த அழுத்தம் என்றும் இதய பலவீனம் என்றும், நரம்புக் கோளாறு என்றும் பலர் புலம்புகின்றனர். இவைபோன்ற பலவித நோய்கள் மனக்கோளாறுகளினால் விளைபவை என்பது இக்கால ஆய்வாளர் கருத்தாகும். எனவே, தீய எண்ணங்களை விட்டொழிப்போம்; நல்ல எண்ணங்களை வளர்ப்போம். நாம் அனுமதித்தாலொழிய யாரும் - எந்த எண்ணமும் நம்முள் புக இயலாது.



114

*வினாக்கள்*

18. ஒருவன் தன் மனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க என்ன செய்ய வேண்டும்? (3)

19. நாம் எவ்வாறு நமக்குத் தண்டனை கொடுத்துக் கொள்கிறோம்? (3)

20, எப்போது ஒருவனின் வாழ்க்கை துயர் நிறைந்ததாக ஆகிவிடும்? (4)

21. நாம் பெற்ற அறிவு எப்போது நமக்குப் பயன்படும்? (4)

22. கோபத்தை எவ்வாறு விலக்கலாம்? (4)



145

23. நாம் ஏன் மனத்தில் நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்? (4)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

24. *பொருள் எழுது (4 மதிப்பெண்கள் )*

(அ) அல்லல்கள் - ____________________

(ஆ) இயக்கத்தையும் - ____________________

----- முற்றும் -----



146

*விடைகள்*

1. மட்டுமே
2. அமர்ந்து
3. இரண்டையுமே
4. வளர்ந்து
5. அதனை

6. அடிமைப்பட்டுக் கிடந்தன அல்லது அடிமைப்படுத்தப்பட்டிருந்தன
7. அனைவரும் வியக்கின்றனர்
8. அங்கு மோதிக்கொண்ட இரண்டு வாகனங்களே ஆகும்.
9. பல நடுத்தரக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன

10. நாடுகளில்
11. பூச்சிகளை
12. பூக்களிலிருந்து
13. மணத்தால்

14. 5
15. 3
16. 1
17. 7

18. ஒருவன் தன் மனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அதன் உள்ளே புகும் எண்ணங்களையும் ஆசைகளையும் பற்றி மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். (3)

19. துயர எண்ணங்களையும் பயம் நிறைந்த எண்ணங்களையும் பொறாமை நிறைந்த எண்ணங்களையும் கெட்ட எண்ணங்களையும் நம்முள்ளே விடுவதன் மூலம் நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்கிறோம். (3)

20. ஒருவனின் வாழ்வில் <u>*அல்லல்கள்*</u> வரும்போது அவற்றைக் களைவதற்கான மாற்று யோசனைகளைத் தேடாமல் அவற்றில் மூழ்கும்போது வாழ்வு துயர் நிறைந்ததாகிவிடுகிறது. (4)

21. ஒவ்வொரு முறையும் நிகழ்கின்ற ஒவ்வொரு செயலையும் அறிவு பூர்வமாக ஆராய்ந்து, ஏன், எப்படி என்று கேட்டுப் புரிந்துகொள்ளும்போது நாம் பெற்ற அறிவு நமக்குப் பயன்படுகிறது. (4)

22. நமது மனத்தில் திடீரென்று எழுந்த கோப உணர்ச்சியின் காரணம், மனத்தில் தோன்றிய ஓர் எண்ணமே என்பதைப் புரிந்து கொள்வதன் மூலம் நாம் கோபத்தை விலக்கலாம். (4)

23. ஆஸ்துமா, இரத்த அழுத்தம், இதய பலவீனம், நரம்புக்கோளாது போன்ற நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள நாம் நம் மனத்தில் நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். (4)

24. (அ) துன்பங்கள் (ஆ) செயல்பாட்டையும் (4)



11x7

PRIMARY SCHOOL

PRELIMINARY EXAMINATION

HIGHER TAMIL - PAPER

PRIMARY SIX

Name : ____________________ (     )

Class : P 6 ______.

Marks : _____/60

Duration : 1h 20 min

Date :

**Instructions**

1. Write your name and class on this page.
2. Do not turn the pages until you are told to do so.
3. Check the pages carefully to make sure that the questions are all in order.
4. Read the instructions carefully before answering the questions.
5. Do not waste time. If a question is difficult, go on to the next one.
6. Answer all questions. Do not leave any blanks.
7. There are 8 pages in this paper.

1148

P6 HMT

*Prelims தாள் - 4*

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் <u>ஒன்றைத்</u> தேர்ந்தெடுத்து <u>150 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

<u>வினா 1</u>

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**உன் பெற்றோரைப் பெருமையடையச் செய்த செயல்**

ஒரு நாள் சிறுவர்கள் இருவர் பெருவிரைவு போக்குவரத்து நிலையத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அச்சமயம் ஒருவன் தண்டவாளத்தில் தவறி விழுந்து விட்டான். நீ அப்போது நடந்துகொண்ட விதம் உன் பெற்றோருக்குப் பெருமையைத் தேடித் தந்தது.

<u>வினா 2</u>

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

ஈரச் சந்தைக்குச் செல்ல விருப்பமில்லாத என்னை அன்று என் அம்மா வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றார். உள்ளே வர மறுத்து சந்தையின் நுழைவாயிலில் தனியாக நின்று கொண்டிருந்தேன். அப்போது...............

149

Name : ___ ________________ Date : __________________ Exam Paper : Prelim HMT 1

'அ' பிரிவு

<u>பிழை திருத்தம்</u> ( 10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.

ஒரு பண்ணையாரிடம், வேலைக்காரன் ஒருவன் இருந்தான். எதைச் சொன்னாலும் எதிர்க்கேள்வி கேட்காமல் அதைச் செய்ய மாட்டான். இல்லாத சந்தேகங்களை எழுப்பி பிறரைக் **(Q1)** <u>குளம்பச்</u> செய்வான். எப்படியும் அவனைத் திருத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பண்ணையார், அவன் கழுத்தில் "இவன் ஒரு மூடன்" என்ற அட்டையை ~~அவன் கழுத்தில்~~ **(Q2)**<u>அணிவித்தான்.</u> அவன் அதை பொருட்படுத்தவே இல்லை, தன்னை மாற்றிக்கொள்ளவும் இல்லை.

ஒருநாள் பண்ணையார் நோய்வாய்ப்பட்டு **(Q3)**<u>அவதியுறுகிறார்.</u> "இனி நமக்கு சாதல்தானா?" என்றார் பண்ணையார். "சாதல் என்றால் என்ன?" என்று கேட்டான் வேலைக்காரன். அதற்கு பண்ணையார்,"தெரியாத ஊருக்குப் போதல்!" என்றார். தொடர்ந்து வேலைக்காரன் கேட்ட அனைத்து **(Q4)**<u>கேள்விக்கும்</u> "தெரியாது" என்று பொறுமையுடன் பதிலளித்தார் பண்ணையார்.

"ஐயா! தாங்கள் ஊருக்குப் போவதாகச் சொல்கிறீர்கள். எந்த வழி, எவ்வளவு தூரம், எப்படிச் செல்வது யாவும் தெரியாது என்கிறீர்கள். எனவே, இந்த அட்டையை அணிந்துகொள்ளும் தகுதி உங்களுக்குத்தான் **(Q5)**<u>உல்லது.</u> "என்று கூறி, தான் அணிந்திருந்த அட்டையை அந்த பண்ணையார் கழுத்தில் மாட்டிவிட்டான். பண்ணையாருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



/50

<u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> ( 8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. பலம் வாய்ந்த மல்லர் எளிதில் மரத்தை வீழ்த்தினார்.

பலம் வாய்ந்த மல்லரால் எளிதில் ________________________________.

Q7. தோபா ஏரியின் பலவண்ண நீரைக் கண்டு சுற்றுப்பயணிகள் வியந்தனர்.

தோபா ஏரியின் பலவண்ண நீர் சுற்றுப்பயணிகளை ________________________________

Q8. தம்பியின் கவனக்குறைவால் அவனுடைய தங்க மோதிரம் காணாமல் போனது.

தம்பியின் தங்க மோதிரம் காணாமல் போனதற்கு________________________________

________________________________________________________________.

Q9. கடும் பயிற்சியின் காரணமாக போட்டியாளர்கள் வென்றார்கள்.

கடும் பயிற்சி இல்லாவிட்டால், போட்டியாளர்கள் ________________________________

________________________________________________________________



151

வேற்றுமை (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

சரண், செல்வன் ஆகிய இருவருமே இளவயதில் நண்பர்களாக இருந்தனர். (Q10)________ (போட்டி) காரணமாக பகைவர்களாக மாறினர். ஒருமுறை வியாபாரத் தொடர்பாக இருவரும் கப்பலில் பயணம் செய்தனர். சரண் கப்பலின் முன்பகுதியிலும் செல்வன் பின்பகுதியிலும் அமர்ந்திருந்தார்கள்.

திடீரென்று கடுமையான சூறாவளிக் காற்று வீசியபோது கப்பல் கவிழ்ந்து விடக்கூடிய நிலை தோன்றியது. கப்பலின் பின் பக்கம் அமர்ந்திருந்த செல்வன் கப்பல் (Q11)________ (மாலுமி) ஓடிச் சென்று, "கப்பல் மூழ்குவதாக இருந்தால் கப்பலின் எந்தப் பக்கம் முதலில் மூழ்கும்?" என்று கேட்டான்.

"கப்பலின் முன் பகுதிதான்!" என்று மாலுமி பதில் சொன்னான். இதைக் கேட்டு அதிர்ந்துபோனான் செல்வன். பகைமையைக் காட்டிலும் (Q12)________ (தன்) நண்பனின் உயிரே முக்கியம் எனக் கருதினான். "(Q13)________! "(நண்பன்) இங்கு விரைந்து வா! சீக்கிரம்!" எனக் கூக்குரல் இட்டான்.

சரணும் உடனே கப்பலின் பின்பகுதிக்கு வந்தான். அவன் செல்வனின் பெருந்தன்மையைக் கண்டு நெகிழ்ந்து போனான். அன்றிலிருந்து இருவரும் தங்களுடைய பகைமையை மறந்தனர். மீண்டும் நண்பர்கள் ஆனார்கள்.



152

‘ஆ’ பிரிவு

<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> ( 8 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குரிய பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

பொன்னையா என்பவன் ஓர் ஊரில் வாழ்ந்தான். அவனது திருட்டுத்தனமான நடவடிக்கைகளை உணர்ந்த மக்கள், அவன் திருந்துவதற்காக பல வாய்ப்புகளை அளித்தனர். (Q14) __________________________. ஒருநாள், பொன்னையா, தெருவின் ஓரத்தில் இருந்த தையற்கடையில் சிறுவன் ஒருவன் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். "எனக்கு அவசரமாக பணம் தேவைப்படுகின்றது. அதனால் நான் என் கோழியை உன்னிடம் விற்கிறேன்," என்று கூறினான்.

சிறுவன் மௌனமாக இருந்தான். (Q15) ____________________________ "இந்த அருமையான கோழியை பிரியாணி செய்து சாப்பிட்டால் பிரமாதமாக இருக்கும். பத்து வெள்ளிக்கு கோழியை வாங்குகிறாயா?" என்று கேட்டான் பொன்னையா. அதற்குச் சம்மதித்த சிறுவனிடம், "நீ முதலில் பணத்தைக் கொடு!" என்று கூறினான் பொன்னையா. (Q16) ______________________ .கோழியை விற்பதுபோல் நடித்து, சிறுவனை ஏமாற்றி பணத்தைப் பெறலாம் என்பதுதான் பொன்னையாவின் திட்டம். ஆனால், சிறுவன் அவனது பிடிவாதத்தைக் கைவிடுவதுபோல தெரியவில்லை.

பொன்னையா உடனே கீழே கிடந்த ஒரு துண்டுத்தாளில் கோழி போல் ஒரு படத்தை வரைந்து, அதைச் சிறுவனிடம் கொடுத்து, பணத்தைக் கேட்டு மிரட்டினான். சிறுவன் சற்று யோசித்தான். அருகில் கிடந்த இன்னொரு துண்டுத்தாளில் 'பத்து வெள்ளி' என்று எழுதி பொன்னையாவிடம் நீட்டினான். "இனியாவது, நீங்கள் நேர்மையாக நடந்துகொள்ள பழகுங்கள்" என்று கூறிய சிறுவன், கடையைச் சுத்தம் செய்யத் தொடங்கினான். (Q17)_________________________ சிறுவன் சொன்னபடி, அன்றிலிருந்து நேர்மையாக வாழத் தொடங்கினான் பொன்னையா.



153

(1) கோழியைப் பற்றி மேலும் பேசினால்தான் சிறுவன் வழிக்கு வருவான் என்று பொன்னையா எண்ணினான்.

(2) இதைச் சிறிதும் எதிர்ப்பார்க்காத பொன்னையா வெட்கித் தலை குனிந்தான்.

(3) இருப்பினும் அவன் பசியால் வாடினான்.

(4) "முதலில் கோழியைத் தாருங்கள்," என்று சிறுவன் பிடிவாதமாக இருந்தான்.

(5) இருப்பினும் அவன் திருந்துவதாக இல்லை.

(6) இதைச் சிறிதும் எதிர்ப்பார்க்காத பொன்னையாவுக்குக் கோபம் வந்தது.

(7) கோழியைக் காண்பித்தால்தான் சிறுவன் வழிக்கு வருவான் என்று பொன்னையா எண்ணினான்.

(8) "முதலில் கோழியைக் காட்டுங்கள்," என்று சிறுவன் ஆணித்தரமாகக் கூறினான்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

**'இ' பிரிவு**



156

சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

1980இல் 'மாஸ்டர்மைண்ட்' (mastermind) என்னும் ஒரு விளையாட்டில், பிரட் அவுஸ்கோ (Fred Housego) என்பவர் முதல் பரிசை வென்றார் வாடகை உந்துவண்டி ஓட்டுநரான அவர், மொழி வல்லுநர்களாலும் பதில்கூற இயலாத கேள்விகளுக்குப் பதிலளித்து, உலகை வியப்பில் ஆழ்த்தினார் தான் அப்போட்டியில் கலந்துகொண்டதற்கான காரணத்தைக் கூறியபோது, பிரட் மக்களை மேலும் வியக்கச் செய்தார்.

பிரிட்டின் மூத்த மகன் ஒரு மருத்துவராக விரும்பினான். அதற்காக பிரட் அவனை ஒரு மருத்துவக் கல்லூரியில் சேர்க்கவேண்டும். வறுமையின் காரணமாக, தன்னுடைய மகனின் கனவை நனவாக்க முடியவில்லையே என்னும் கவலை பிரட்டுக்கு இருந்தது.

ஒருநாள், அவருடைய வாகனத்தில் ஒருவர் பதற்றத்துடன் ஏறினார். மருத்துவமனையை நோக்கி விரைவாக ஓட்டச் சொல்லி அவசரப்படுத்தினார். மருத்துவமனையை அடைந்தும், அவர் மீத சில்லறையைக்கூட வாங்காது, சென்றுவிட்டார். சிறிது தூரம் சென்றதும், வாகனத்தில் பை ஒன்று இருப்பதை அறிந்தார் பிரட்.

அப்பை அந்தப் பயணிக்குச் சொந்தமானது என்பதை உணர்ந்த பிரட், அதைத் திறந்து பார்த்தார். என்ன ஆச்சரியம்! பைக்குள் கத்தை கத்தையாக பணம் இருந்தது. இதைப் பார்த்ததும், தனது மகனை இனி மருத்துவக் கல்லூரியில் சேர்த்துவிடலாம் என மகிழ்ந்தார் பிரட். அவ்வேளையில், மோட்டார் வாகனத்தில் ஒரு வாலிபன் அங்கு வந்தான். "என் தந்தை இந்த வாகனத்தில்தான் பயணம் செய்தார். அவர் ஒரு கருப்பு பையை வாகனத்தில் விட்டுவிட்டார். அந்தப் பை மிகவும் முக்கியமானது. தயவுசெய்து அதைத் தாருங்கள்," என பதற்றத்துடன் கெஞ்சினான்.

ஆனால், பிரட் பை ஏதும் இல்லை என பொய்சொல்லி அந்த வாலிபனை விரட்டினார். ஆனால் குற்றவுணர்வின் காரணமாக. அவர் மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றார். மருத்துவமனையின் வெளியே, பயணியும் அவர் மகனும் கதறி அழுதுகொண்டிருந்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டார். பணத்தை அவர்களிடம் கொடுத்தபோது, "சரியான நேரத்தில் மருந்தை வாங்கிக் கொடுத்திருந்தால், என் அம்மாவைக் காப்பாற்றியிருக்கலாம்,' என்று வாலிபன் கூறியதைக கேட்டதும், பிரட்டுக்கு இதயமே நின்றுவிடுவதுபோன்று இருந்தது.

ஒரு நிமிடம் பேராசைப்பட்டதால், ஓர் உயிரிழப்புக்கு காரணமாகிவிட்டோமே என்னும் குற்றவுணர்வு அவரது மனத்தை அழுத்திக்கொண்டே இருந்தது. ஆதலால், வறுமையில் வாடிய பிரட்,



155

மீண்டும் அக்குடும்பத்திடம் மன்னிப்புக் கேட்டு, பரிசுத்தொகையையும் அவர்களுக்கே தானஞ்செய்து, உலக மக்களை நெகிழ வைத்தார்.

<u>வினாக்கள்</u>

Q18. பிரட் உலகை வியப்பில் ஆழ்த்தக் காரணம் என்ன? (2)

Q19. எது பிரட்டுக்குக் கவலையை அளித்தது? (4)

Q20. பிரட் வாலிபனிடம் ஏன் பொய் கூறினார்? (4)

Q21. எதனால் பிரட் மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றார்? (4)

Q22. பணம் எதற்குத் தேவைப்பட்டது? (4)

Q23. பிரட் பரிசுத்தொகையைத் தானஞ் செய்யக் காரணம் என்ன? (4)

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருலை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. வறுமை - ______________ (2)

ஆ. கெஞ்சினான் - ______________ (2)



157

## P6 HMT

ஒரு பண்ணையாரிடம்.........

1. குழம்பச் 2. அணிவித்தார் 3. அவதியுற்றார் 4. கேள்விகளுக்கும்
5. உள்ளது

6. மரம் வீழ்த்தப்பட்டது.

7. வியக்க வைத்தது.

9

8. அவனுடைய கவனக்குறைவே காரணமாகும்.

9. பெற்றிருக்க முடியாது.

10. போட்டியின் 11. மாலுமியிடம் 12. தன்னுடைய 13. நண்பனே

14. 5 15. 1 16. 4 17. 2

18. வாடகை உந்துவண்டி ஓட்டுனரான பிரட் மொழி வல்லுநர்களாலும் பதில் சொல்ல முடியாத வினாக்களுக்கு பதில் கொடுத்ததும் போட்டியில் கலந்துகொண்டதற்கான காரணத்தைக் கூறியதுமே அவர் உலகை வியப்பில் ஆழ்த்தக் காரணமாகும்.

19. அவரது வறுமை நிலைமையின் காரணமாக மருத்துவராக ஆக ஆசைப்பட்ட அவரது மகனின் கனவை நனவாக்க முடியாதது பிரட்டுக்குக் கவலையளித்தது.

20. தன் உந்துவண்டியில் பயணம் செய்தவர் விட்டுச் சென்ற பையில் இருந்த கத்தைக் கத்தையான பணத்தை வைத்துத் தன் மகனை மருத்துவக் கல்லூரியில் சேர்த்து விடலாம் என் பிரட் எண்ணியதால் அவர் பையைக் கேட்டு வந்த வாலிபனிடம் பொய் கூறினார்.

21. தான் திருடியது தவறு என்ற குற்றவுணர்வு ஏற்பட்டதால் பணத்தைத் திருப்பிக் கொடுக்க பிரட் மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றார்.

22. நோய்வாய்ப்பட்டிருந்த பயணியின் மனைவிக்குச் சரியான நேரத்தில் மருந்து வாங்கித் தந்து அவரைக் காப்பாற்ற பணம் தேவைப்பட்டது.

23. தன் ஒரு நிமிடப் பேராசையால் ஓர் உயிரிழப்புக்குத் தான் காரணமாகி விட்டோமே என்ற குற்றவுணர்வு அவரது மனத்தை அழுத்திக் கொண்டே இருந்ததே பிரட் பரிசுத் தொகையை அக்குடும்பத்துக்குத் தானஞ் செய்யக் காரணமாகும்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. ஏழ்மை
ஆ. மன்றாடினான்

PRIMARY SCHOOL
PRELIMINARY EXAMINATION
PRIMARY 6

HIGHER TAMIL

PAPER 1 & 2

**NAME :** ______________________( ) **DATE :** ____________

**CLASS : PRIMARY 6** _______ **PARENT'S SIGNATURE:** ____________

**Total Time :**

---

**1 QUESTION** PAPER

**40 marks**

2 QUESTION PAPER

60 marks

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Write your Index No. in the boxes at the top right hand corner.
2. Do not turn over this page until you are told to do so.
3. Follow all instructions carefully.
4. Answer ONE question.

160

P6 HMT

*Prelims தாள் - 5*

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**சுற்றுலாவின்போது நடந்த அசம்பாவிதம்**

நீ உன் பள்ளி மாணவர்களுடன் சுற்றுலா சென்றாய். நீ சுற்றுலா செல்ல வேண்டிய இடத்தை அடைந்ததும் மாணவர்கள் ஆவலாகப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அப்போது எதிர்பாராத விதமாய் ஓர் அசம்பாவிதம் நடந்துவிட்டது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

சனிக்கிழமை மாலைப்பொழுது. நானும் என் நண்பர்களும் என் வீட்டின் அருகிலிருந்த திடலில் காற்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தோம். மெதுமெதுவாக வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. திடீரென்று "பளீர்" என்ற மின்னல் வெட்டியது....................

தாள் - 5

பெயர்: ____________ (6___)
தேதி: ____________

"அ" பிரிவு

60

**A1** பிழை திருத்தம் **(10** மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

கடலில் ஆயிரக்கணக்கான மீன் வகைகள் வாழ்கின்றன. அவற்றுள் கடல் குதிரையும் ஒன்று. (Q1) **இவை** நீரில் நிமிர்ந்து நீந்துவதால் இதைப் பார்ப்பதற்கு ஒரு மீனைப் போலவே இருக்காது. இதன் முகம் குதிரையின் முகத்துடன் ஒத்திருப்பதால் இது கடல் குதிரை என (Q2) **அழைக்கப்பட்டது**.

கடல் குதிரையின் உடல் முழுவதையும் தடிப்பான செதில்கள் (Q3)**முடி** இருக்கும். இதன் முதுகின் மேல் வளர்ந்திருக்கும் ஒரு சிறிய (Q4)**தோள்** துடுப்பைக் கொண்டு இது நீந்துகிறது.

ஆண் மீனின் உடலில் வளர்ந்திருக்கும் சிறிய தோல் பையில் பெண் மீன் முட்டையிடும். முட்டையிலிருந்து வெளியாகும் குஞ்சு, பையின் உள்ளேயே வளர்ந்து, இரை (Q5)**தேடும்** வெளியே வரும். கடல் குதிரை வளர்வதைப் பார்ப்பதே ஒரு விந்தையாகும்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



16

**A2** <u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> **(8 மதிப்பெண்கள்)**

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. சேரனுக்குச் சிறந்த மதிப்பெண்கள் பெற்றதை எண்ணி கோபால் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

சேரன் சிறந்த மதிப்பெண்கள் பெற்றது ______________________

______________________

Q7. உலகத்தின் பல இடங்களில் நடக்கும் பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டப் பல உலக தலைவர்கள் தீவிரமாகச் செயல்படுகிறார்கள்.

பல உலக தலைவர்கள் தீவிரமாக செயல்படுவதற்கு ______________________

______________________

Q8. வரவுக்கு ஏற்ற செலவு செய்தால் வறுமை நம்மை அணுகாது.

வறுமை நம்மை அணுகாமல் இருக்க ______________________

______________________

Q9. கலை கலாச்சார மேம்பாட்டுக்கு அரசாங்கம் அளிக்கும் ஆதரவும் நிதி உதவியும் இன்றியமையாதவை.

அரசாங்கம் ஆதரவும் நிதி உதவியும் அளிக்குமானால் நம் ______________________

______________________

**A3** <u>வேற்றுமை உருபுகள்</u> **(8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.**

ஓர் ஊரில் மாறன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் உணவு உண்ண (Q10)________________(நாற்காலி) அமர்ந்தான். அந்நேரத்தில் வாசலில், "அம்மா, பசி!" என்று ஒருவன் அழைத்தான். அதைக் கேட்டு மாறன் கொஞ்சம் (Q11)________________(சோறு) அள்ளிச் சென்றான். அங்கே ஒரு நாய் தன் வாலை ஆட்டிக்கொண்டு (Q12)________________(பரிதாபம்) பார்த்தது. மாறன் சோற்றைப் பாதி நாய்க்கும் பாதி பிச்சைக்காரனுக்கும் கொடுத்தான். "நானோ மனிதன். எனக்குச் சமமாக (Q13)________________(நாய்) சோறு போடுகிறாயே!" என்றான் பிச்சைக்காரன். "இந்த நன்றியுள்ள நாய் என் வீட்டை எப்போதும் காக்கும். ஒவ்வொரு நாளும் என் வீட்டு வாசலில் வந்து தீனிக்காகக் காத்திருக்கும்!" என்று பதிலளித்தான். பிச்சைக்காரனோ கோபங்கொண்டு ஒன்றும் பேசாமல் சென்றான்.

(1) கோவலன் நீண்ட தூரம் பயணம் செய்தான்.

(2) அவன் அழகும், வீரமும் நிரம்பியவன்.

(3) கோவலன் நிரபராதி என்று உணர்த்தினாள்.

(4) பிறகு, கண்ணகியிடம் திரும்பி வந்தான்.

(5) இருவரும் சோழ நாட்டில் வாழ்ந்து வந்தார்கள்.

(6) பாண்டிய மன்னன் கோவலனுக்கு மரண தண்டனை அளித்தான்.

(7) பாண்டிய மன்னன் கோவலனைச் சோழ நாட்டுக்கு அனுப்பினான்.

(8) தனது கணவனுடைய அருமை பெருமைகளைப் பற்றிப் பேசினாள்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



16k

C5. சுயவிடைக் கருத்தறிதல் (26 ம)

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது

தங்கம் பழமையும் மதிப்பும் மிகுந்த உலோகமாகும். ஆனால் இரும்பையும் அலுமினியத்தையும் (Aluminium) போன்று தங்கம், தொழில் துறையில் பயன்படுவது இல்லை. ஆயினும் பல நூற்றாண்டுகளாக மனிதன் தங்கத்தைத் தேடுவதில் பெரிதும் காலத்தைக் கழித்து வந்துள்ளான்.

தங்கம் பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்படுகிறது. அத்தங்கத்தை மீண்டும் மறைவிடங்களில் புதைத்து வைப்பதற்கும் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி வைப்பதற்கும் மனிதன் பாடுபட்டு வருகிறான். அதனால் தங்கம் மனிதனுடைய செல்வச் செழிப்பின் சின்னமாக விளங்கி வருகிறது. அத் மட்டுமல்லாது இன்று உலக நாடுகளின் நாணயங்களின் மதிப்பு தங்கத்தைக் கொண்டே மதிப்பிடப்படுகிறது.

தங்கம் இரசாயனப் பொருட்களால் பெரும்பாலும் பாதிக்கப்படுவதில்லை. ஆகையால் இது பூமியில் தனி உலோகமகவே கிடைக்கிறது. பாறைகளிலும் நதியின் மணலிலும் தங்கம் சிறு சிறு மணலாகக் கிடிஅக்கிறது. இது வண்டல் மண் தங்கம் என்று சொல்லப்படுகிறது. சில இடங்களில் கடல் நீரிலிருந்தும் பாறைகளிலிருந்தும் தங்கம் எடுக்கப்படுகிறது.

அக்கலத்து மனிதர்கள் ஆற்றுமணலைச் செம்ம்றியாட்டுத் தோலில் போட்டு அலசித் தங்கத்தை எடுத்து வந்தார்கள். அவ்வாறு அலசும்போது கனமான தங்கம் தோலில் உள்ள மயிர்களுக்கு இடையே அடியில் தங்கிவிடும். இலேசான மணல் தண்ணீரால் அடித்துச் செல்லப்படும். இந்த முறையே தென் ஆப்பிரக்கச் சுரங்கங்களில் பின்பற்றப்பட்டது.

தூய்மையான தங்கம் மிருதுவானது. அதைக் கொண்டு வலிமையுள்ள பொருட்களைச் செய்ய முடியாது. என்வேதான் தூய தங்கத்துடன் வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் கலக்கப்படுகின்றன.

தங்கத்தை எந்த உருவத்திற்கு வேண்டுமானாலும் அடித்து நீட்டி வளைக்க முடிகிறது. எனவே நுட்பமான வேலைப்பாடுகள் அமைந்த நகைகள் செய்வதற்குத் தங்கம் பயன்படுகிறது. இவ்வாறு செய்யப்படும் அழகிய தங்க நகைகள் பெண்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. மேலும், கோயில்களின் கோபுரங்களை மூடிய தகடுகளாகவும்

இருந்து வருகிறது. அது மட்டுமின்றி தங்கம் உலகின் எல்லா ந்-அடுகளின் சேமிப்பு அறைகளிலும் சேமிக்கப்பட்டுப் பத்திரமாக வைக்கப்பட்டு வருகிறது.

<u>வினாக்கள்</u>

Q18. அ) இரும்பும் அலுமினியமும் தங்கத்திலிருந்து எவ்வாறு பயன்பாட்டில் வேறுபடுகின்றன ? (2 ம.பெ)

______________________________

______________________________

______________________________

______________________________

ஆ) மனிதன் தங்கத்தைத் தேடுவதில் பெரும் முயற்சி எடுத்து வருவது ஏன்? (2 ம.பெ)

______________________________

______________________________

______________________________

______________________________

19. உலக நாடுகள் தங்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கக் காரணம் என்ன? (3 ம.பெ)

______________________________

______________________________

______________________________

______________________________

" ஆ " பிரிவு

**B4** <u>கருத்தறிதல்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் **Q14** முதல் **Q17** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

கண்ணகி கோவலன் கதையைக் கூறும் காப்பியம் சிலப்பதிகாரம். கோவலன் சோழநாட்டுத் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகனின் மகன். (Q14) ______________. இவனுடைய மனைவி கண்ணகி சிறந்த அழகியாகவும் கற்புக்கரசியாகவும் இருந்தாள்.

கோவலன் தன் மனைவியைப் பிரிந்து, மாதவி என்னும் நடன அழகியுடன் வாழ்ந்து தன் பொருளையெல்லாம் இழந்துவிட்டான். எனவே கண்ணகியிடம் திரும்பிச் சென்று மீண்டும் பொருளீட்ட எண்ணினான். (Q15)______________. அவன் பாண்டிய நாட்டை அடைந்தான். அங்குக் கண்ணகியின் கால் சிலம்புகளில் ஒன்றை விற்க எண்ணினான். ஆனால் அரண்மனைப் பொற்கொல்லனின் சூழ்ச்சியால் கோவலனின் மீது திருட்டுப்பழி சுமத்தப்பட்டது. (Q16)______________.

இச்செய்தியை அறிந்த கண்ணகி பாண்டிய நாட்டு மன்னனைக் காணச் சென்றாள். (Q17)______________. உண்மையை அறிந்த பாண்டிய மன்னன் வருந்தி உடனே உயிர்நீத்தான்.

கண்ணகியின் கால் சிலம்பின் காரணமாக நடந்த கதையை இளங்கோவடிகள் ஒரு நூலாக இயற்றி, அதற்குச் சிலப்பதிகாரம் எனப் பெயரிட்டார்.

A3 <u>வேற்றுமை உருபுகள்</u> (8 மதிப்பெண்கள்)
பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

ஓர் ஊரில் மாறன் என்ற சிறுவன் வாழ்ந்து வாந்தான். ஒருநாள் அவன் உணவு உண்ண (Q10)____________________(நாற்காலி) அமர்ந்தான். அந்நேரத்தில் வாசலில், "அம்மா, பசி!" என்று ஒருவன் அழைத்தான். அதைக் கேட்டு மாறன் கொஞ்சம் (Q11)____________________(சோறு) அள்ளிச் சென்றான். அங்கே ஒரு நாய் தன் வாலை ஆட்டிக்கொண்டு (Q12)____________________(பரிதாபம்) பார்த்தது. மாறன் சோற்றைப் பாதி நாய்க்கும் பாதி பிச்சைக்காரனுக்கும் கொடுத்தான். "நானோ மனிதன். எனக்குச் சமமாக (Q13)____________________ (நாய்) சோறு போடுகிறாயே!" என்றான் பிச்சைக்காரன். "இந்த நன்றியுள்ள நாய் என் வீட்டை எப்போதும் காக்கும். ஒவ்வொரு நாளும் என் வீட்டு வாசலில் வந்து தீனிக்காகக் காத்திருக்கும்!" என்று பதிலளித்தான். பிச்சைக்காரனோ கோபங்கொண்டு ஒன்றும் பேசாமல் சென்றான்.

Q20. வண்டல் மண் தங்கம் என்று எதை அழைக்கிறார்கள்? (3 ம.பெ)

Q21. அக்காலத்தில் எவ்வாறு ஆற்றுமணலில் கலந்திருந்த தங்கம் பிரித்தெடுக்கப்பட்டது? (4 ம.பெ)

Q22. தூய்மையான தங்கத்தின் குறைபாடு என்ன? (4 ம.பெ)

Q23. தங்கம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? (4 ம.பெ)

Q24. <u>பொருள் எழுது</u> (6 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. நதியின் - ______________________ (2 ம. பெ)

ஆ. பின்பற்றப்பட்டது - ______________________ ( 2 ம.பெ)

P6 Preliminary Exam

தேர்வுத்தாள் - 5

கடலில் ஆயிரக்கணக்கான..........

1. இது 2. அழைக்கப்படுகிறது 3. முடி 4. தோல் 5. தேட

6. கோபாலுக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது.

7. காரணம் உலகத்தில் பல இடங்களில் நடக்கும் பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டவே ஆகும் .

8. வரவுக்கு ஏற்ற செலவு செய்ய வேண்டும்.

9. கலையும் கலாச்சாரமும் மேம்பாடு காணும்.

10. நாற்காலியில் 11. சோற்றை 12. பரிதாபத்துடன் 13. நாய்க்கு

14. 2 15. 1 16. 6 17. 3

18.அ) இரும்பும் அலுமினியமும் தொழில் துறையில் பயன் படுகின்றன. ஆனால் தங்கமோ தொழில் துறையில் பயன்படுவதில்லை. இவ்வாறு இரும்பும் அலுமினியமும் தங்கத்திலிருந்து பயன்பாட்டில் வேறு படுகின்றன.

ஆ) தங்கம் மனிதனின் செல்வச் செழிப்பின் சின்னமாக விளங்கி வருவதால் அவன் தங்கத்தை தேடுவதில் பெரும் முயற்சி எடுத்து வருகிறான்.

19. உலக நாடுகளின் நாணயங்களின் மதிப்பு தங்கத்தைக் கொண்டு மதிப்பிடப்படுகிறதே அவை தங்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கக் காரணமாகும்.

20. பாறைகளிலும் நதியின் மணலிலும் கிடைக்கும் சிறு சிறு மணலான தங்கத்தை வண்டல் மண் தங்கம் என்று அழைக்கிறோம்.

21. அக்காலத்தில் மனிதர்கள் ஆற்று மணலைச் செமறியாட்டுத் தோலில் போட்டு அலசித் தங்கத்தை எடுத்து வந்தனர். அவ்வாறு கனமான தங்கம் ஆட்டின் தோலிலுள்ள மயிர்களுக்கிடையே அடியில் தங்கி, இலேசான மணல் தண்ணீரால் அடித்துச் செல்லப்படும். இவ்வாறு அக்காலத்தில் ஆற்றுமணலில் கலந்திருந்த தங்கம் பிரித்தெடுக்கப்பட்டது.

22. தூய்மையான தங்கம் மிருதுவானதால் அதைக் கொண்டு வலிமையுள்ள பொருட்களைச் செய்ய முடியாத்தே தூய்மையான தங்கத்தின் குறைபாடு ஆகும்.

23. தங்கம் பெண்களால் விரும்பும் நுட்பமான நகைகளாகவும், கோயில்களின் கோபுரங்களை மூட தகடுகளாகவும் செய்யப் பயன் படுகிறது. அதுமட்டுமல்லாமல், உலகின் எல்லா நாடுகளின் சேமிப்பு அறைகளிலும் சேமிக்கப்பட்டு பத்திரமக வைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தங்கம் பயன்படுத்தப்படுகிறது.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. ஆற்றின்
ஆ. கடைப்பிடிக்கப்பட்டது

172

PRIMARY SCHOOL

PRELIMIMARY EXAMINATION

HIGHER TAMIL

PRIMARY SIX

Name: ____________________

Class: Pr. 6( ______ )

Date: ____________

| /60 |

Parent's signature: ______________________

INSTRUCTIONS:

1. DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
2. FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
3. ANSWER ALL THE QUESTIONS.

173

P6 HMT

*Prelims தாள் - 6*

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**நான் பங்கேற்ற விவாதப் போட்டி**

தொடக்கநிலை மாணவர்களுக்கான விவாதப் போட்டியில் பங்கேற்ற உனக்கு சிறந்த பேச்சாளருக்கான பரிசு கிடைத்தது. உன் மனநிலையையும் அதற்காக நீ மேற்கொண்ட பயிற்சிகளைப் பற்றி எழுது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த என்னை பேரிடியின் ஓசை எழுப்பியது. அப்போதுதான் என் படுக்கை அறை சன்னல் திறந்திருப்பதைப் பார்த்தேன். அதை மூடச் சென்ற போது......................

தாள் - 6

Name . ______________

Exam Paper 6 - HTL

## இரண்டாம் பகுதி

**A1. பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவன், (Q1). தமக்கு விரைவில் மரணம் வந்துவிடுமோ எனப் பயந்து கொண்டு இருந்தான். அதை அறிந்த அவனது அமைச்சர் அரசனின் வீண் பயத்தைப் போக்க விரும்பினார். (Q2 )*ஆனால்*, அவர் முனிவர் ஒருவரை அணுகி, மன்னனின் பிரச்சனையைக் கூறி அவரை அரண்மனைக்கு அழைத்து
(Q3) வந்தார்கள்.

அரசன் முனிவரை வணங்கித் தன் அச்சத்தை அவரிடம் கூறினான். "எனக்கு மரணம் வராமல் தடுக்க வேண்டும்." என்று அரசன் வேண்டினான். முனிவர், (Q4 ) புன்னகையும் புரிந்தவாறே, "உனக்கோ இப்பொழுது இளம் வயது. ஆனால், நீ எப்பொழுதும் இளமையுடன் இருக்க முடியுமா? சில ஆண்டுகளுக்குப் பிறகு நீ கிழவனாகி விடுவாய். அப்போது நீ அதிக நாள்கள் உயிர் வாழ விரும்ப மாட்டாய்" , என்று அரசனிடம் கூறினார். முனிவரின் பேச்சைக் கேட்ட மன்னனுக்குப் புத்தி (Q5 ) தெலிந்தது. அவன் தன் வீண் பயத்தை விட்டொழித்தான்.

| | |
|---|---|
| Q1. | |
| Q2. | |
| Q3. | |
| Q4. | |
| Q5. | |



P6 | HMT | Prelims | 6
175

A2. வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.**

Q6. வழக்கறிஞரின் வாதத் திறமையால் நிரபராதி தண்டனையிலிருந்து தப்பினார்.

நிரபராதி தண்டனையிலிருந்து தப்ப ______________________________

______________________________

Q7. அரசன், புலவரின் அறிவையும் அடக்கத்தையும் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினான்.

புலவரின், அறிவும் அடக்கமும் அரசனை ______________________________

______________________________

Q8. மாணவர்களின் சிந்தனைத் திறன்கள் வளர, அரசாங்கம் பல புதிய உத்திகளைக் கையாள்கிறது.

மாணவர்களின் சிந்தனைத் திறன்கள் வளர, பல புதிய உத்திகள் ______________________________

______________________________

Q9. தன் மகன் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற செய்தியைக் கேட்ட தாய் பேரானந்தம் அடைந்தார்.

தன் மகனின் தேர்வு முடிவுகள் தாய்க்கு ______________________________

______________________________



176

A3. வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.**

அம்பு எய்வதில் வல்லவனான வேடன் ஒருவன் வழக்கம் போல வேட்டைக்குச் சென்றான். களைப்பு மிகுதியால் ஒரு மரத்தின் Q10 ____________(அடி) இளைப்பாற எண்ணினான். அங்கே, ஒரு வெள்ளைநிறப் பாம்பு படுத்திருந்தது. அதை அவன் பார்த்துக் கொண்டிருக்கையில், ஒரு பருந்து வந்து அப்பாம்பைத் தூக்கிச் சென்றது. பாம்பு, "என்னைக் காப்பாற்றுங்கள்!" என உரக்கக் Q11 ____________(கத்தியது), வேடன் செவியுற்றான். அவன் சிறிதும் தாமதிக்காமல், ஓர் அம்பை எடுத்துக் குறி வைத்துப் பருந்தை நோக்கி எய்தான்.

அந்த அம்பு Q12__________(பருந்து) கால்களில் பட்டுக் காயத்தை ஏற்படுத்தியது. Q13__________(காயம்), குருதி வழிந்தது. வலி பொறுக்க முடியாத பருந்து, பாம்பை விட்டுவிட்டது. உயிர் தப்பிக் கீழே விழுந்த அந்தப் பாம்பு வேடனுக்கு நன்றி கூறி, பொற்காசு ஒன்றை அவனது காலடியில் போட்டது.



171

**பின்வரும் பகுதியில் 14 முதல் 17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

சோழ நாட்டை மானவர்மன் என்னும் மன்னர் நீதி தவறாது ஆண்டு வந்தார். அவருக்கு அறிவுமிக்க அமைச்சர் ஒருவரும் சிறந்த தளபதி ஒருவரும் இருந்தனர். அரசர் அந்த இருவரின் துணையோடு நாட்டில் நல்லாட்சி புரிந்து வந்தார்.

மன்னர் பெரும்பாலும், அமைச்சரின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து வந்தார்.

Q14. ___________. நாளடைவில் தளபதிக்கு அமைச்சர் மீது அதிகச் சினம் உண்டாயிற்று.

Q15. ______________.

ஒரு நாள், தளபதி தம் தேரில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே அமைச்சர் வந்தார்.

Q16. ____________. இதைக் கவனித்த தேரோட்டி, "தளபதியாரே! தாங்களும் அமைச்சரும் நம் மன்னரின் இரு கண்கள். அவரைக் கண்டு ஏன் விலகிச் செல்கிறீர்கள்? உங்களது துணையோடுதான் அவர் இந்நாட்டைச் சிறப்பாக ஆள்கிறார்.

Q17. _____________. அவர் மீது பகை வேண்டாம்." என்று கூறியதும், தளபதி தன் தவற்றை உணரத் தொடங்கினார்.

1. அவர் அமைச்சரை மன்னர் முன்னிலையில் அவமானப்படுத்துவதற்குச் சமயம் பார்த்திருந்தார்.
2. ஒரு நாள் அரசரும் தளபதியும் சண்டைபோட்டுக் கொண்டனர்.
3. அரசருக்கு நல்ல பாடம் கற்றுபிக்க வேண்டும் என்று திட்டமிட்டார்.
4. எனவே, தளபதிக்கு அமைச்சர் மீது பொறாமை ஏற்படத் தொடங்கியது.
5. உடனே, தளபதி அவரை நோக்கிச் சென்றார்.
6. அமைச்சர் உங்கள் மீது பெரு மதிப்பு வைத்திருக்கிறார்.
7. உடனே, தளபதி, தேரோட்டியிடம் வேறு திசையில் செல்லுமாறு கூறினார்.
8. அமைச்சர் எதையும் தந்திரமாகச் செய்பவர்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14. | |
| Q15. | |
| Q16. | |
| Q17. | |



178